இந்திய கற்பரசிகள்

பிரம்பூர் கலவல கண்ணன் செட்டியார்
உயர் கலாசாலைத் தமிழ்ப் புலவர்
மங்கலம் குப்புசாமி முதலியார்
இயற்றியது

சென்னை
இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
1926

விலை அணா 4] [காபிரைட்

பொருள் அடக்கம்

இந்திய கற்பரசிகள்

1. நளாயினி

முதலாம் அத்தியாயம்

பல வருடங்களுக்கு முன் இந்தியாவில் நிடதம் என்னும் பெயருடைய தேசம் ஒன்றிருந்தது. அதை ஆண்டு வந்த அரசன் பெயர் நளச்சக்ர வர்த்தி என்பது. அவ்வேந்தன் தன் தேசத் திற்கு மாவிந்தம் என்னும் நகரைத் தலை நகரா கக்கொண்டு செங்கோல் செலுத்தி வந்தான். குடிகள் ஒரு வகைப் பயமும் இல்லாமல், சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

'குடி யுயரக் கோன் உயரும்,' என்ற பெரியோர் வாக்கின்படி அரசன், எல்லாச் செல்வங்களையும் அடைந் திருந்தான். அவனுக்குப் புத்திரச் செல் வங்களாக ஒரு புதல்வனும், ஒரு புதல்வியும் இருந்தனர். அப்புதல்வியின் பெயர் நளாயினி என்பது. அவள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற் குணங்களையும் நாற்படை யாகக் கொண்டு, பெற்றோர் களிக்கவும், கற்றோர் வியக்கவும் நடந்து வந்தாள்.

நளாயினி தன்னுடைய நற்குணங்களோடு இயற்கை யழகும் பெற்று, இலக்குமி என விளங்கி ஞள். அவளைக் கண்டார் அனைவரும், 'இவள் விஞ்சையர்க் கரசியோ! மனித உருவம் தாங்கிய பெண் தெய்வமோ!' என்று அதிசயித்தனர். அவள் தந்தை அவளுடைய நற்குணங்களையும், தெய்வ பக்தியையும் கண்டு, பேரானந்தம் அடைந் திருந்தான்.

இவ்வாருக நளாயினி நற்குணங்களோடு வளர்ந்து, தக்க பருவம் அடைந்தாள். பிறகு அர சன் அவளை ஒரு கன்னி மாடத்துள் வைத்தான்; அங்கு அவளுக்குத் துணையாகப் பல தாதியர்களை அமர்த்திஞன்.

சில காலம் சென்ற பிறகு அரசன் நளாயினிக் குக் கலியாணம் செய்ய எண்ணங் கொண்டான். ஆயினும், 'இவளுடைய அழகிற்கும் நற்குணத் திற்கும் பொருத்தமான புருடன் ஒருவன் கிடைப் பானே!' என்று சந்தேகம் அடைந்து, மனக் கவலை கொண்டான். இவ்விதமாக வேந்தன் இருக்கும் காலத்தில், சில அரச குமாரர்கள் நளா யினியை மனைவியாகப் பெற அரசனிடம் வந்தார் கள். வந்த அரச குமாரர்களை அரசன் ஆராய்ந்து அவர்களில் ஒருவரும் தன் மகளுக்குப் பொருந் திய புருடராக இல்லாததைக் கண்டான். அத ஞல் அவன் இன்னது செய்வது என்று தெரியா மல், மனம் வருந்தி இருந்தான். பிறகு அவன்,

'நம் மகளுக்கு ஏற்ற மணாளன் இவ்வுலகில் கிடைப்பது அரிது ! அரிது !! ஆதலால், வந்தவர்களை அவளிடம் அனுப்பி, அவள் யாரைத் தேர்ந்தெடுக்கிறாளோ, அவருக்கே தடை யின்றி மணம் முடித்துவிடலாம்,' என்று எண்ணங் கொண்டு, வந்த அரச குமாரர்களை நளாயினியிடம் அனுப்பினான்.

கன்னி மாடம் புகுந்த அரச குமாரர்களில் சிலர் அங்குள்ள தாதிகளாலேயே வெறுக்கப்பட்டனர். மற்றும் சில அரச குமாரர்களை நளாயினி திரை மறைவிலிருந்து பார்த்து, அவர்களில் ஒருவரும் தன் மனத்திற்கு ஏற்றவராகக் காணாமையால், அவர்களை அனுப்பிவிட்டாள்.

இவ்வாறாகப் பல தேசங்களிலிருந்தும் வந்த அரச குமாரர்களில் ஒருவரையும் நளாயினி விரும்பாமல், தன்னழகிற்கு ஒத்தவர் இவ்வுலகில் ஒருவரு மில்லை என்று சிறிது தற்பெருமை கொண்டு, காலங் கழித்து வந்தாள்.

இரண்டாம் அத்தியாயம்

நிடத தேசத்தைச் சார்ந்த காட்டில் நந்தவனமொன் றிருந்தது. அவ்வனத்தில் பல வகை மலர்ச் செடிகளும், அநேகவித மரங்களும் நிறைந்திருந்தன. மான், மரை முதலிய சிறு விலங்கு

கள் கூட்டங் கூட்டமாக அங்கு வாழ்ந்து வந்தன. அச்சோலையின் இடையே பல வகை நீர்ப்பூக்கள் நிறைந்த தடாகம் ஒன்றிருந்தது. அத்தடாகத்தின் கரைகளில், பல முனிவர்கள் பரம்பொருளின் திருவடியை யடைய ஓயாது தவம் பல புரிந்துகொண் டிருந்தார்கள். அம் முனிவர்களுக்கு இடையே ஒருவர், கறுத்த சடை முடியும், வெண்ணீறு அணிந்த திரு மேனியு முடையவராய்ப் பரம சிவனைப்போல விளங்கினார். அவர் ஒரு நாள் தம் தவச் சாலையினின்றும் நீங்கி, ஏதோ ஒன்றைத் தேட ஆவலோடு செல்லுவார்போல மாவிந்த நகரை நோக்கி நடந்தார்.

இவ்விதம் சென்ற முனிவர் பெயர் மௌத்கலியர் என்பது. அவர் அத் தலை நகரினுட் சென்று, அரசனது கோவிலை அடைந்தார். அங்கு அவர் தம் வருகையை அரசனுக்குக் காவலர்கள் மூலமாகத் தெரிவித்தார்.

அதைக் கேட்ட அரசன் சரேலென் றெழுந்து, எதிர்கொண்டு வந்து, அவருக்கு வந்தனம் செய்தான்; பிறகு அவன் அவரை ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்த்தி, 'சுவாமி! தேவரீர் அடியேனை ஒரு பொருளாகக் கருதி இங்கு வந்ததன் காரணமென்ன ? நாங்கள் எவ்வளவு வேண்டினாலும் இங்குக் கிடைப்பதற்கு அருமையாகிய தங்கள் தரிசனம் இன்று எங்களுக்கு எளிதிற் கிடைக்கும்படி தாங்களே வலிய வந்தது எம் முன்னோர்

செய்த புண்ணியம்,' என்று வினயத்துடன் சொல்லி நின்றான்.

அந்த இன்சொற்களைக் கேட்டு மகிழ்ச்சி கொண்ட முனிவர், அரசனை வாழ்த்தி, அவனையும் அமரச் செய்து, "அரசர்க் கரசனே! யான் உன்னிடமிருந்து ஒரு பொருளைப் பெற்றுக்கொண்டு போக இங்கு வந்தேன். உனக்கு அதைக் கொடுக்கச் சம்மத மிருக்குமானால், யான் அப்பொருளை இன்ன தென்று தெரிவிக்கின்றேன். நான் கேட்பதைத் தருவாயோ?" என்றனர்.

அதைக் கேட்ட அரசன், "உலக இன்பத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொண்ட முனிவர் யாது கேட்கப்போகின்றார்? ஒரு வேளை, யாகத்திற்கு வேண்டிய பொருளைக் கேட்க வந்திருக்கலாம். அப்பொருளைக் கொடுக்க நம்மால் ஆகாதோ? அவர் விருப்பத்தின்படியே கொடுத்தனுப்புவோம்," என்று நினைத்து, "முனி புங்கவரே! தாங்கள் கேட்பதைத் தடை யின்றி யான் கொடுக்கின்றேன். தாங்கள் விரும்பிய பொருளை வெளியிடல் வேண்டும்," என்றான்.

உடனே முனிவர், "காவல! இதுவரையில் யான் துறவறத்தை மேற்கொண் டிருந்தேன். துறவறத்தினும் இல்லறமே சிறந்தது என அறிந்து, இல்லறத்தை நடத்த ஆவலுடையவனாயினேன். அதற்காக ஒரு கன்னிகையை மணம் புரிந்துகொள்ள விரும்பினேன். நான்

மணக்கும் பெண் மிக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாக இருத்தல் வேண்டும். அவள் அவ்வாறு இல்லாவிட்டால், இல் வாழ்க்கை வேறு விதத்தில் எவ்வளவு சிறப்புடைய தாயினும் அது பயன்படுவ தில்லை. 'கற்புடைய மனைவியோடு கூடி இல்லறத்தை இனிதாக நடத்துபவன் தவஞ் செய்யும் முனிவரைவிடச் சிறந்தவ னவான்,' என்று வேத நூல் கூறுகின்றது.

"எல்லாச் சிறப்பும், கற்பு வாய்ந்த பெண்ணால் தான் கை கூடும். அவள், 'பெய்' என்றால், மழை பெய்யும்; 'அழிக' என்றால் உலகம் அழியும். இத்தகைய பெண்ணரசியையே யான் வேண்டுகிறேன். இவ்வளவு உயர்ந்த இலக்கணங் களுடைய நங்கை உன் அருந்தவப் புதல்வியே யாவள். அவளுடைய பெருமையைப் பிறர் வியந் துரைக்கக் கேட்டிருக்கின்றேன். ஆதலால், யான் அவள் மீது விருப்பங் கொண்டு இங்கு வந்தேன். நீ கொடுத்த வாக்கைப் பொய்யாக்காமல், உன் மகளை எனக்கு விவாகம் புரிவித்து என்னுடன் அனுப்ப விரும்புகிறேன்," என்றனர்.

அம்மொழிகளைக் கேட்டதும் அரசன் திடுக்கிட்டு, மனம் நடுங்கி, "ஓகோ! இஃதென்ன! விபரீதமாக இருக்கின்றதே! இத்துறவியார் இவ்விதம் கேட்பா ரென்பது என் மனத்தில் சிறி தளவும் தோன்றிய தில்லையே! சடை பிடித்த மயிரும், புழுதி படிந்த மேனியும் உடையவராய்க் கொடு

விலங்குகள் வசிக்கும் கானகத்திலிருக்கும், இக்கிழ முனிவருக்கோ, என் அருந்தவப் புதல்வியைக் கொடுப்பேன்! இனி என் செய்வது? கேட்டதைக் கொடுப்பதாக வாக்குறுதியும் செய்துவிட்டேன். சொன்னதை மறுத்தால், 'பிடி சாபம்,' என்பரே! அதனால் என் குலமே அழிந்து போகுமே! 'துறவிக்கு வேந்தன் துரும்பு,' அல்லவா?" என்று பல விதம் எண்ணிப் பிறகு ஒருவாறு தேறி, "சுவாமி! நான் வாக்குக் கொடுத்தபடி செய்யச் சிறிதும் தடையில்லை. ஆயினும், என் மகளை மணக்க வருவோரை நான் அவளிடம் அனுப்புவதே வழக்கம். நீர் நேரே அவளைக் கண்டு, அவளுடைய முத்திரை மோதிரத்தைக் கொண்டுவந்தால், நான் தடையின்றி மணம் முடித்து வைக்கின்றேன்," என்று கூறினன். முனிவரும் அவ்விதமே செய்யச் சம்மதப்பட்டவராய்க் கன்னி மாடத்தைக் காட்டும்படி அவ்வரசனால் அனுப்பப்பட்ட காவலன் பின் சென்றனர்.

சென்ற முனிவர் கன்னி மாடத்தினுட் புகுந்து, அங்கு ஒரு தனியிடம் சென்று, தம் தவப் பெருமையால், மன்மதனும் அழகில் வெட்கும்படி அழகிய உருவை எடுத்தார். பிறகு அவர் அங்குள்ள தோழிகளைக் கண்டு, தம் வருகையை அரச குமாரிக்குத் தெரிவிக்கும்படி கூறினர். அவரது அழகைக் கண்ட தோழிகள் மிக்க

வியப்படைந்து ஓடிச் சென்று, நளாயினிக்கு அவர் வருகையைத் தெரிவித்தார்கள்.

அதைக் கேட்ட நளாயினி ஒரு மறைவிடம் சென்று, அங்கு வந்த போலிச்சுந்தரப் புருடரைக் கண்டு, மிகவும் வியந்தனள் ; அவரை உள்ளே அழைத்து வந்து ஆசனத்தில் உட்கார வைக்கும்படி தாதிகளுக்குக் கட்டளை இட்டாள். தோழியர்கள் அவரை அழைத்து வந்து, ஓர் அழகிய பீடத்தில் உட்காரச்செய்து, அவரைக் கண்டு களித்திருந்தார்கள்.

நளாயினி திரை மறைவில் இருந்தபடியே சித்திர கூடத்தில் வீற்றிருக்கும் காளையைக் கண்டு, உள்ளத்தில் உவகை பொங்கத் தனக்குள், "என்னே விந்தை! இதுவரையில் எத்தனையோ அரச குமாரர்கள் நம்மை விரும்பி இங்கு வந்தார்கள். அவர்களில் ஒருவரும் இவர் அழகில் நூற்றில் ஒரு பங்கும் வாய்ந்தவராகக் காணப்பட வில்லை.

"உலகத்தில் இவ்வளவு அழகு வாய்ந்த புருஷரும் இருக்கின்றனரோ ! இவர் விஞ்சையர்க் கிறைவரோ! தேவரோ ! யாராக இருப்பினும், இவரே நம் ஆசைக்குத் தகுந்த அன்பர் ஆவர்," என்று பலவாறு எண்ணி, அவரிடம் தோழியர்களை அனுப்பி, அவருடைய வரலாற்றை விசாரிக்கச் சொன்னாள்.

பணிப் பெண்கள் அவ்வாறே அச்சுந்தரப் புருடரிடம் சென்று கேட்டனர். அதற்கு அவர், "மயில்

போன்ற மாதர்களே! யான் வேற்றுத் தேசத்தி லிருந்து இங்கு வந்தேன். உங்கள் தலைவி மிக்க அழகுடையவ ளென்றும், தன் மனத்திற்கு இசைந்த மணாளனைத் தேடுகின்றாள் என்றும் கேள்விப்பட்டேன். அம்மாதினுக்கு என் மீது விருப்பம் உண்டோ என்பதை அறிய வந்தேன்," என்றனர்.

இவ்வுரைகளைத் திரை மறைவி லிருந்து கேட்ட நளாயினி தன் விருப்பத்தை அகத்தடக்கிக் கற் பென்னும் தாழிட்டு, நாணத்துடன் தலை குனிந் திருந்தனள். அவளது நிலையைக் குறிப்பால் அறிந்த தோழியர், அவளை நோக்கி, "பொற் றொடிப் பாவையீர்! உம் விருப்பம்போல் ஆகுக. நீர் இத்தனை நாள் நோற்ற நோன்பு இன்றே யாக கூடியது. உமது விருப்பத்திற்கு அறி குறியாக உம்முடைய முத்திரை மோதிரத்தைக் கொடுத் தனுப்பினால், உமது தந்தையார் விரைவில் விவா கத்தை நிறைவேற்றுவார்," என்றனர். நளாயினி அவ்விதமே தன் முத்திரை மோதிரத்தைக் கழற் றித் தோழியரிடம் கொடுத்து, அங்கு வந்த சுந்த ரப் புருடரிடம் கொடுக்கச் சொன்னாள். தோழி யர்கள் அம் மோதிரத்தை அவரிடம் கொடுத்துத் தங்கள் தலைவியின் விருப்பத்தையும் தெரிவித் தார்கள்.

முத்திரை மோதிரத்தைப் பெற்ற சுந்தரர், புன் சிரிப்புக் காட்டித் திரை மறைவி லிருக்கும் நளா

யினியை அங்கிருந்தபடியே கண்டு, "என் அன்பே! உன்னை நான் மனைவியாக அடைந்தது நான் செய்த பெரும்பாக்கியமே யாகும்! இம் மோதிரத்தை உன் தந்தையிடம் காட்டி விரைவில் திருமணம் முடிக்கச் சொல்லுகிறேன்," என்று கூறி, அவளிடத்தில் விடை பெற்று எழுந்தனர்.

எழுந்த போலி அழகர், மாடியை விட்டுக் கீழே இறங்கி, அங்கு ஒரு தனியிடம் சேர்ந்து, தம் இயற்கை வடிவ மாகிய முனிவர் வடிவத்தை அடைந்தார். பின்னர் அவர் அரசன் இருக்கும் சபையை அடைந்து, தம் வருகையைத் தெரிவித்தார். அரசன் அவரை வரவேற்று, சென்ற விஷயத்தைப் பற்றி விசாரித்தான். முனிவர் வாய்விட்டு ஒன்றுங் கூறுமல், தாம் பெற்ற முத்திரை மோதிரத்தை அரசனிடம் கொடுத்தார். அரசன் அதைக் கண்டதும் திகைப் படைந்து, "என்னே நம்மகளின் மதி யீனம்! எத்தனையோ அரச குமாரர்கள் செல்வத்திலும், அழகிலும் சிறந்தவர்களாய் வந்தார்களே! அவர்களை எல்லாம் விரும்பாமல், 'கனி யிருக்கக் காயைத் தின்றாற்போல' இக்கிழ முனிவரை விரும்பி னளே! இனி நாம் செய்வது என்ன! அவள் விருப்பத்தின்படியே விவாகத்தை முடிப்போம்," என்று நினைத்து, "சுவாமி! உம்முடைய இஷ்டப்படியே விவாகத்தைச் சீக்கிரத்தில் முடித்து வைக்கின்றேன்," என்றனன்.

உடனே நளன் அமைச்சர்களைக் கூப்பிட்டு, மண வினைக்கு வேண்டிய பொருள்களைச் சீக்கிரம் சேகரிக்கக் கட்டளை யிட்டான். மந்திரிகளும் அவ்வாறே சித்தம் செய்தனர். நளாயினிக்கு மணம் நடக்கும் விஷயம் அவ்வூர் முழுதும் பரவியது. அவ்விடயத்தைக் கேட்டார் பலரும் பல வாருகப் பேச ஆரம்பித்தனர்.

ஊரார் பேச்சு ஒரு பக்க மிருக்க, அரண்மனையி லுள்ளவர்களிலேயே சிலர், "நளாயினிக்குப் பயித்தியம் பிடித்து விட்டது போலும்! அவள், கையில் விளக்கை வைத்துக்கொண்டு கிணற்றில் விழுந்தாற்போல, மணிமுடி தரித்த மன்னர்களை யெல்லாம் அனுப்பிவிட்டுக் கடைசியில் ஒரு கிழ முனிவனை விரும்பினளே! இவளா கற்றறிந்த பெண்? இதற்கோ நம்மரசர் இவ்வளவு அருமையாக இவளைக் காத்து வந்தார்?" என்றனர்.

அவ்வுரைகளைக் கேட்ட மற்றுஞ் சிலர், "நீங்கள் கூறுவது ஆச்சரியமாக இருக்கிறது! நளாயினி, 'இவ்வுலகத்தில் கிடைப்பதற் கரிய ஒரு சுந்தரப் புருடரையே அடைந்தாள்,' என்று கேள்விப்பட்டோம். அரசரும் நீங்கள் சொன்னவாறு செய்யச் சம்மதிப்பாரா? சொல்வார் சொன்னாலுங் கேட்பாருக்கு மதி யில்லையா? அவளுக்கு பயித்தியம் ஒன்றும் இல்லை; உங்களுக்குத்தான் பயித்தியம் பிடித் திருக்கிறது," என மொழிந்தனர்.

இவ்விதமாக அரச மாளிகையிலும், மற்ற

இடங்களிலும் பலர் பல விதமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அரசன் தன் மகள்மீது மிகுந்த வருத்த முடையவனாய் இருந்தனன். ஆனால், நளாயினி, "நம் மனத்திற் கிசைந்த மணாளரை யடைந்துவிட்டோம்," என்று, ஆனந்தக் கடலில் முழுகி இருந்தாள்.

மூன்றாம் அத்தியாயம்

அரசன் கட்டளையினால் புரோகிதர் குறித்த முகூர்த்த நாள் நெருங்கியது. ஒரு நாள் நளாயினி, தன் தந்தை தன்மீது வருத்தங் கொண்டு இருப்பதாக அறிந்து, தோழியர்களைக் காரணங் கேட்டாள். அதற்குத் தாதியர்கள், "அம்மா! அதைப் பற்றி நாங்கள் முன்னமே அறிந்தோம்; ஆனால் அதை உங்களிடத்திற் சொல்ல நாவிழந்தவர்களாய் இருக்கின்றோம். தங்களுடைய எண்ணம் 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது போல' வாயிற்றும். தாங்கள் கானகத்தில் வசிக்கும் ஒரு கிழ முனிவரை விரும்பி, அவரிடம் தங்கள் முத்திரை மோதிரத்தைக் கொடுத்தீர்களாம். அம்முனிவர் அதை அரசரிடம் காட்டி முகூர்த்த நாள் ஏற்படுத்தி விட்டனராம். அதனால், நம் அரசர், அவருடைய மனத்திற்குச் சம்மதமில்லாத காரியத்தைத் தாங்கள் செய்ததாகத் தங்கள்மீது வருத்தங் கொண்டிருக்கின்றார், என்று கேள்விப்

பட்டோம். இது விபரீதமாக இருக்கிறது. அன்று தங்களை நாடி வந்த சுந்தரப் புருடரை நாங்கள் நேராகக் கண்டோம். அப்படியிருக்க இவ்வதந்தி எவ்வாறு உண்டாயிற்றோ நாங்கள் அறியோம்," என்று கூறிக் கண்ணீர் கலங்க நின்றார்கள்.

அதைக் கேட்ட நளாயினி மனம் திடுக்கிட்டு, மெய் வெயர்த்து நாக் குழற வேரற்ற மரம்போலக் கீழே விழுந்தனள். பிறகு நளாயினி தாதியர்களால் சிகிச்சை செய்யப்பட்டு ஒருவாறு தேறினாள். பின்னர் அவள், "அந்தோ! ஈசா! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே! நான் தவசியையா வேண்டினேன்? ஒரு தவசியும் இங்கு வரவில்லையே! ஒருவராலும் பெறுதற்கரிய பெரும் புருடரையன்றோ யான் பெற்றேன்? நான் அவ்வழகரை அடைந்ததைப் பற்றிப் பொறாமை கொண்டு என் மீது பழி தூற்றுகின்றனர் போலும்!" என்று தனக்குள் பலவாறு சிந்தித்துத் தாதிகளை நோக்கித் தன் தந்தையைத் தன்னிடம் அழைத்து வரும்படி கட்டளையிட்டாள். அவர்களும் அவ்வாறே சென்று அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

அவ்வுரையைக் கேட்ட அரசன், அவ்வதந்தியின் உண்மையை நேரே விசாரித் தறிவோம் என்று எண்ணி, நளாயினியின் கன்னி மாடத்திற்குச் சென்றான். தன் தந்தையினது வருகையை யறிந்த நளாயினி, தன் தாதியர்களுடன் எதிர் சென்று, தன் தந்தையை வணங்கி, உள்ளே

அழைத்து வந்தனள். வந்த மன்னன் நடந்த விஷயங்களைத் தீர விசாரித்து, வியப் படைந்து, தன்னுடைய மகள்மீது தான் கொண்டிருந்த தப் பெண்ணத்தைத் தவிர்த்து, ஒன்றுங் கூறாது, மௌன முற்றிருந்தான். அப்போது அவனு டைய கண்களில் நீர் ததும்பியது.

நளாயினி அதைக் கண்டு, தன் தகப்பனைத் தழுவிக்கொண்டு, கண்ணீர் கலங்க, வாய் குழற, "தந்தையீர்! என் தலை விதி இப்படியு மிருக்குமா? நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத் ததே! இனி யென் செய்வது? இது வினைப் பய னது வன்மை போலும்! 'வினைப் பயனை வெல்ல வேத முதலாம் அனைத்தாய நூலகத்தும் இல்லை' என்று பெரியோர் கூறியது என்னிடத்து உண் மை யாயிற்று. அவரவர் செய்த வினைப் பயனை அவரவர் அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந் திட் டொன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்."

என்று ஆன்றோர் கூறியது பொய்யாகுமா? இனி இதைப் பற்றி நாம் வருந்துவதில் பயனில்லை. போன நாள் செய்தவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருளாகின்றன. ஆதலால், தந்தை யீர்! பெற்றதே பெரும்பாக்கியம் என்று அக மகிழ்ந்து, இனி நடக்கவேண்டிய விஷயங்களைப்

பற்றிக் கவனித்துச் சந்தோஷத்தோடு மண வினையை முடியும்," என்றனள்.

தன் மகளின் பெருங்குணத்தையும், கல்வியின் திறத்தையும் கண்ட அரசன், நளாயினியைப் பார்த்து, "என் கண்ணே! கண்ணிற் சிறந்த கரு மணியே!! உன் மனம் களிக்க நீ வாழவேண்டு மென்பதே என் கருத்து. என் மனம் களிக்க ஒரு மன்னனை மணக்காமல், மாட்சிமை தங்கிய ஒரு முனிவரை நீ மணந்ததைப் பற்றி யான் வருந் தியது என்னுடைய அறியாமையே யாகும். நீ மறுமைப் பயனுக்கு வேண்டிய வழியை யடைந் தாய். கடவுள் உனக்கு நன்மையையே செய்தார். என் அருந்தவக் குழந்தாய்! அடுத்த வாரத்தில் முகூர்த்தம் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. நீ சுக மாக வாழ்க. நான் சென்று வருகிறேன்," என்று கூறி, வெளியே வந்தனன்.

நிடத தேசத்திற்குத் தலை நகராகிய மாவிந்த நக ரம் பொன்னகர்போல அலங்காரம் செய்யப்பட் டது. பல தேசத்து மன்னர்களும், அங்கு வந் திருந்தார்கள். நகரின் உள்ளும், வெளியும் வாத்தி யங்கள் கடலைப்போலக் கறங்கின. அரச வீதி யில் தேர்கள், அலங்கரித்த குன்றுகளைப் போலச் சென்றன. ஆடவர்களும், பெண்களும் தங்களை அலங்கரித்துக்கொண்டு வீதிகளில் வருவாரும் போவாருமாக இருந்தனர். நளாயினி தேவ மாதைப்போல அலங்கரிக்கப்பட்டு, நட்சத்திரங்

களுக்கு இடையே பிரகாசிக்கும் சந்திரனெனப் பல தோழியர்களுடன் கலியாண கூடத்தை நோக்கி நடந்தாள். வந்த மணமகளை அரசன் மௌத்கலியருக்குக் கடிமணம் புரிவித்தான். அப்போது பல முனிவர் ஆசி கூறினர். அந்தணர் வாழ்த்தினர். மன்னர் துதித்தனர்.

இவ்விதமாக மணத் திருவிழா நடந்த பிறகு, மௌத்கலியர் தம் மாமன் வீட்டில் தம் மனைவியாகிய நளாயினியுடன் சில நாள் சிறக்க இருந்தனர். பின்னர் ஒரு நாள் அவர், தம்மிடத்திற்குச் செல்ல அரசனை விடை கேட்டனர். அரசனும் மனமுவந்து விடை யளித்தான்.

பிறகு முனிவர் நளாயினியிடம் சென்று, அவள் உள்ளக் கருத்தை யறிய எண்ணி, "பெண்ணே! யான் இங்கு வந்து பல நாட்களாயின. இன்று யான் எனதிருப்பிடம் செல்ல விரும்புகின்றேன். உனக்கு என்னோடு கொடு விலங்குகளுறையும் கடுங்கானகத்துக்கு வர இஷ்டமோ? பல இன்பங்களும் பொருந்திய இந்நகரில் பெற்றோருடன் இருக்க இஷ்டமோ?" என்று கேட்டனர்.

அதற்கு நளாயினி தன் கொழுநரை வணங்கி, "எனதாருயிர்த் தலைவரே! விட்டுப் பிரிந்து செல்லவோ அடியேனை மணந்தீர்! தாங்கள் வசிக்கும் இடம் காடே யாயினும், நான் தங்களோடு இருப்பின், அது எனக்குக் கடிநக ராகும். நான்

தங்களை விட்டு ஒரு கணமும் பிரிந்து உயிர் தரித்திரேன். அடியாளையும் தங்களோடு அழைத்துச் செல்லுங்கள்," என்று பணிவுடன் கூறி நின்றாள்.

அதைக் கேட்ட தபோநிதி, "யான் உன்னை என்னுடன் அழைத்துச் செல்ல யாதும் தடையில்லை. ஆனால், நீ என்னோடு வந்தால், பல வாறு வருந்தவேண்டி இருக்கும். காட்டில் கல்லிலும், முள்ளிலும் நடக்க நேரிடும்; வெயிலிலும், மழையிலும் அலைவதைப் படும்படி ஏற்படும். இரவில் தூக்க மிராது. நீயோ, அரசகுமாரி; செல்வமாக வளர்ந்தவள்; சித்திரக் கூடத்தில் பலர் பணி செய்யப் பஞ்சணையின் மீது இன்னிசை கேட்டுத் துயின்றவள். நீ என்னுடன் வந்தால், உனக்கு அக்காட்டில் வீணையின் ஒலி ஏது? மெத்தை ஏது? பணிப்பெண்கள் எவர்? நிற்க மரத்தின் நிழலும், வசிக்கக் குடிசையும், படுக்கப் புற்றரையுந்தான் கிடைக்கும். காலந் தவறாமல் இன்னடிசில் உண்ட நீ, கிடைக்கும் போது காய்களையும், கிழங்குகளையும், சருகுகளையும் எவ்வாறு தின்னுவாய்? இவையு மல்லாமல், யானோ, தவசி. நான் நினைத்த போது நினைத்த இடம் சென்றுவிடுவேன். அப்போது நீ தனிமையாக இருக்க நேரிடும். மேலும், நான் அனேக நாட்கள் வரையில் ஆகார மில்லாமல், தவத்தில் தங்கிவிடுவேன். அச்சமயம் நீ ஆகாரம், நித்திரை இல்லாமல், வருந்த நேரிடும்.

ஆகையால், நீ இவைகளை யெல்லாம் நன்றாக யோசித்துச் சொல். சுகமான இடத்தை விட்டு நீ என்னோடு வருவதனா லுனக்கு ஒரு சிறிதும் நன்மை யிராது," என்று கூறி, அக்கற்புடைய மங்கையின் மனத்தைக் கலக்கினார்.

மௌத்கலியர் கூறி வந்த மொழிகளை நளா யினி கேட்டுக் கண்களில் நீர் கலங்க அவரு டைய பாதங்களில் விழுந்து வணங்கி, "சுவாமி! இவ்வாறெல்லாம் கூறி அடியாளைச் சோதிக் கின்றீர் போலும்! என்றைக்கு நான் தங்களுக்கு மனைவி யானேனோ அன்றையிலிருந்தே நான் தங்களுக்கு உரியவ ளானேன். பெண்கள் புரு டரை அடையும் வரையில் பெற்றோர் ஆதர விலும், கொழுநரை அடைந்த பிறகு அவருடைய ஆதரவிலும் வாழவேண்டு மென்று பெரியோர் கள் கூறியிருப்பது தங்களுக்குத் தெரியாத தன்று. கணவரைப் பிரியாமல் உடனிருந்து அவருக்குப் பணிவிடைகளைக் குறிப்பறிந்து செய்பவளே பதி விரதை யாவள். ஆதலால், நீரே எனக்குத் தெய் வம். நீரே எனக்குத் தாய் தந்தையர். தாங்கள் வசிக்கும் இடம் எனக்குத் தேவலோக மாகும். தாங்கள் புசித்து விட்ட எச்சில் எனக்கு அமிர்த மாகும். தங்களுக்குத் திருப்பணி செய்வதே, நான் எடுத்த இந்த உடம்பின் பயனாகும். என்னுடைய உயிரும், உடலும் தங்களுடை யவை. இனி ஒரு விநாடி நேரமும் உம்மை

விட்டு நான் தனித்து இருக்கமாட்டேன்," என்று கூறினாள். பிறகு அவள் உள்ளே சென்று தன் பட்டாடைகளையும், நவரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களையும் நீக்கி, மரவுரி தரித்துக்கொண்டு தன் மணாளர் அருகே வந்து நின்றாள்.

இவ்விதம் தவக் கோலத்தோடு வந்து நின்ற நளாயினியை அரசன் கண்டு, மனம் நொந்து, "என் செல்வக் கிளியே! செழுங்கரும்பே! இவ்வித மான கோலத்தோடு அனுப்பவோ, நான் உன்னை இவ்வளவு நாள் அருமையாக வளர்த்தேன்! இனி என்றைக்கு நான் உன்னைக் காண்பேன்!" என்று பிரிய மனமில்லாமல் பெரிதும் வருந்தினான்.

தன் தந்தையின் துயரத்தைக் கண்ட அக்கற்பரசி தன்னுடைய கண்களில் நீர் சோர, "தந்தையீர்! தங்களுடைய விருப்பத்திற்கு மாறாகக் கடவுள் என்னைத் தாழ்ந்த நிலையில் விடவில்லை. யாவரும் அடைவதற்கு அருமையான பெரும் பதவியையே எனக்கு அவர் அளித்திருக்கிறார். இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் சுகத்தை அடைய விரும்புவது இயல்புதான். ஆனால், அவரவர் எண்ணுவது நடக்கின்றதா?

"வளம்பட வேண்டாதார் யார்? யாரு மில்லை.
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்.
விளங்காய் திரட்டினார் இல்லை; களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்."

"இன்னாருக்கு இது, என்று கடவுள் வகுத்தபடி தான் நடக்கும். நீங்கள் இதை அறிந்தும் அறியாதவர்போல வருந்துவது சரியல்ல," என்று மொழிந்தாள்.

அதைக் கேட்ட நளன் மகளுடைய புத்தியின் திறத்தைக் கண்டு மனம் தேறித் தன் புதல்விக்கு விடையளித்து, அவ்விருவரையும் அனுப்பினான்.

நான்காம் அத்தியாயம்

மாவிந்த நகரத்தினின்றும் புறப்பட்ட மௌத்கலியரும், நளாயினியும் புண்ணிய நதியாகிய கங்கை நதியின் கரை ஓரத்திலுள்ள ஒரு புண்ணிய தலத்தில் தங்கினர். அங்கே மௌத்கலியர் தவம் செய்ய ஆரம்பித்தார். நளாயினி அவருக்குச் செய்ய வேண்டிய வேலைகளைக் குறிப்பறிந்து செவ்வையாகச் செய்து வந்தாள்.

அம்முனிவர் தம் மனைவியாகிய நளாயினி செய்து வரும் பணிவிடைகளைக் கண்டு, மகிழ்வடைந்தார். ஆயினும், அந்த மகிழ்ச்சியை வெளிக்குக் காட்டாமல், அப்பெண் மணியின் கற்பைச் சோதிக்க வேண்டுமென்று கருதினார். அதனால், அவர் அந்நங்கையோடு மனங் களிக்க வார்த்தையாடாமல் அத்தேவியைக் காணும்போதெல்லாம் கடுகடுத்த முகமுடையவராய் இருந்தார். அன்றியும், அவர் தம்முடைய பழுத்த

தேகத்தில் கண்டோர் அருவருக்கத் தக்க பெரும் புண்களை உண்டாக்கிக்கொண்டு, அப்புண்களி லிருந்து சீயும், சில நீரும் வடியச் செய்தார்.

நளாயினி தன் கணவருக்கு உண்டான நோயைக் கண்டு, மனம் வருந்தி, "ஐயோ! நம் முடைய நாயகருக்கு இந்தக் கொடிய நோய் ஏற் பட்டதே! இதனால், அவருக்கு மிகுந்த துன்பம் உண்டாகுமே! கடவுளே! ஒருவிதக் கஷ்டமுங் கொடுக்காமல், அவரைக் காப்பாற்றும்," என்று கட வுளைத் தொழுது, புண்களிலிருந்து வரும் சீயைத் துடைத்துப் பக்குவஞ் செய்து வந்தாள். முனி வர், மேலும், அப்புண்களில் புழுக்கள் நெளியவும், விரல்கள் குறையவும், சதை வெடித்து நீர் வடி யவும், துர்க்கந்தம் வீசவும் செய்தார்.

அப்பொழுதும் நளாயினி தன் மனத்தில் சிறி தும் அருவருப்புக் கொள்ள வில்லை. அந்தக் கற் பரசி அவரை அன்புடன் குளிப்பாட்டியும், புண் களிலுள்ள புழுக்களை மெல்ல எடுத்தெறிந்தும், தன் துணியால் புண்களைத் துடைத்தும் பக்கு வம் செய்து வந்தாள். முனிவர் சாப்பிட்ட உண் கலத்தில் மிகுந்த உணவில் சீயும், புழுக்களும் கலந்திருக்கும். நளாயினி அவைகளைக் கண்டு, அருவருப்புக் கொள்ளாமல், அசுத்தங்களை நீக்கி, அவ்வுணவை அன்புடன் அருந்தி வந்தாள்.

நளாயினியின் நற்குண நற்செய்கைகளை அறிந்த முனிவர் தம் மனத்தில் உவகை அடைந்தும்,

வெளிக்குக் கோப முகத்துடன் தோன்றித் தம் பத்தினியை அடிக்க ஆரம்பித்தார். அப்போதும் அந்த அம்மாள் தன் கணவனிடம் நிறைந்த அன்புடையவளாய் இருந்தாள்.

இவ்விதம் நாட்கள் பல சென்றன. ஒரு நாள் முனிவர் நளாயினியை நோக்கி, "அடி பெண்ணே! நான் உன்னை என்றைய தினம் மணந்தேனோ, அன்றையிலிருந்தே எனக்கு இவ்விதமான துன்பம் உண்டாயிற்று. அதற்கு முன் நான் ஒரு நோயையும் அறியேன். அப்போது என் தேகம் தங்கம் போல இருந்தது. சனியனைத் தாம்பூலங் கொடுத்து அழைத்தாற் போன்று உன்னைத் தேடி மணந்தேன். அடி பாவி! சண்டாளி! என் தலை விதி இப்படியும் இருக்குமா? இந்த வியாதியினால் தீர்த்தங்களுக்கும், க்ஷேத்திரங்களுக்கும் செல்ல முடியாமல் இருக்கின்றேன்," என்று பல நிந்தனை மொழிகள் கூறித் தம் கண்ணில் நீர் விட்டார்.

இதைக் கேட்ட கற்புக் கரசி தன் கொழுநரை வணங்கி, "சுவாமி! என்னுடைய துர்ப்பாக்கியத்தால்தான் தங்களுக்கு இவ்விதமான கஷ்டங்கள் ஏற்பட்டன. தங்களுடைய வியாதியை அடியேனால் போக்க முடியாவிட்டாலும் தாங்கள் செல்ல விரும்பும் இடத்திற்குத் தங்களைப் பக்குவமாக எடுத்துக் கொண்டு போகிறேன். தங்களுக்குப் பயன்படாமல் இவ்வுடலும், உயிரும் இருப்ப

தனால் என்ன பயன் ? ஆதலால், அடியாளுக்குக் கட்டளை இடல் வேண்டும்," என்று வணக்கத்துடன் வேண்டினாள். முனிவரும், "அவ்விதமே செய்க," எனக்கட்டளை இட்டனர். நளாயினி ஒரு கூடையில் அவரை எடுத்து வைத்துத் தன் தலைமீது தூக்கிக்கொண்டு பல விடங்களுக்கும் சென்று முனிவர் விருப்பத்தின்படியே செய்து வந்தாள்.

ஒரு நாள் அவர்கள் ஒரு பட்டணத்திற்கு வந்தார்கள். அங்கு நளாயினி ஒரு மரத் தடியில் அவரை இறக்கி, அவருக்குக் காய் கனிகளைத் தேடிக் கொடுத்து, உபசரித்து வந்தாள். அம் முனிவரும் அவைகளை உண்டு, சில நாள் மௌனமாக இருந்தார்.

ஒரு நாள் அம்முனிவர் தம் பத்தினியை நோக்கி, "பெண்ணே ! என் மனத்தில் சில நாளாக விருப்பம் ஒன்று இருக்கின்றது. அதை நீ எனக்குக் கைகூடச் செய்வாயா ? அதை நான் இன்னதென்று உன்னிடம் தெரிவித்தால், நீ வருந்துவாய் என்று நினைக்கிறேன். அதனால், நான் கொண்ட எண்ணமும் வீணாலும் ஆகும்," என்று கூறிப் பேசாமல் இருந்தனர்.

நளாயினி அதற்கு, "சுவாமி! தங்களுக்கு விருப்பமாக இருப்பது அடியாள் மனத்திற்கு வெறுப்பாக இராது. தங்களுடைய எண்ணத்தை யாதொரு குறைவும் இல்லாமல் நிறைவேற்றுகின்றேன். தயை செய்து அதை வெளியிடல் வேண்டும்," என்று கேட்டாள்.

முனிவர், "பெண்ணே! அப்படியானால் சொல்லுகிறேன். இந்தப் பட்டணத்தின் கீழ்க் கோடி வீதியில் தாசி ஒருத்தி இருக்கின்றனள் எனக் கேள்விப்பட்டேன். அவள் வீட்டிற்குச் செல்லவேண்டுமானால், ஆயிரம் பொன் கொடுக்க வேண்டுமாம் நம்மிடத்தில் பொன் ஏது? பொருளேது அப்படி இருக்க, என் எண்ணம் எப்படி நிறைவேறுமோ அறியேன். இதுவே எனது விருப்பம்," என்று கூறிப் பொய்யாகக் கண்ணீர் விட்டார்.

சூது வாது ஒன்றும் அறியாத முனிவர் பத்தினி, தன் கணவர் விருப்பத்தை எவ்வித மாயினும் நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ண முடையவளாய் இருந்தாள். ஒரு நாள் அவள் மனத்தில் ஓர் எண்ணம் உண்டாயிற்று. அவள் அதன் படியே செய்யத் தீர்மானித்தாள். அவள் மறு நாள் விடியலுக்கு முன் எழுந்து, தாசி வீட்டிற்குச் சென்றாள். அங்கு அவள் தன்னை ஒருவரும் காணாதபடி, அவ்வீட்டின் முன்பக்கத்தைச் சுத்தம் செய்து, நீர் தெளித்து, அழகாகக் கோல மிட்டுத் தன் இருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

இவ்விதம் இரண்டு மூன்று நாட்கள் சென்றன. ஒரு நாள் அவ்வேசி வீட்டு வேலைக்காரி, தான் செய்ய வேண்டிய வீதி வேலை தனக்கு முன் செய்யப்பட்டு வருவதைக் கண்டு வியப்பு அடைந்தாள். அவள் தன்னுடைய தலைவியைக் கண்டு,

"அம்மா! நான் செய்துகொண்டு வரும் வீதி வேலையை யாரோ எனக்குத் தெரியாமல் மிகச் செம்மையாகச் செய்து வருகின்றனர். இதன் காரணம் என்னவோ அறியேன். இது எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது," என்று கூறினள்.

அதைக் கேட்ட அவ்விலை மாது, "அடி! இது எனக்கும் மிகவும் வியப்பாக இருக்கிறது. கூலியைக் கருதாமல் வலிய வந்து வேலை செய்வாரும் இவ்வுலகில் இருக்கின்றனரா? நீ அவ்வேலை செய்பவளைக் கட்டாயம் கண்டு பிடிக்க வேண்டும். இன்று இராப்பொழுது நீ மறைவான ஓரிடத்திலிருந்து பார்த்துக்கொண்டிரு. அவள் வந்ததும் என்னிடம் தெரிவி," என்று கட்டளை இட்டாள்.

வேலைக்காரி அவ்வாறே வெளியே ஒளிந்துகொண்டிருக்கும் போது நளாயினி அங்கு வந்து, வழக்கம் போல வேலை செய்ய ஆரம்பித்தாள். வேலைக்காரி நளாயினியைக் கண்டதும் வேறோர் வழியாகத் தன் தலைவியிடம் சென்று தெரிவித்தாள். அதைக் கேட்டதும் அத்தாசி வெளியே வந்து, நளாயினியைக் கண்டு, அதிசய மடைந்து, "அம்மா! தாங்கள் இருஷி பத்தினியாகத் தோற்றுகிறீர். நானோ, தாழ்வான தொழிலைச் செய்து பிழைக்கும் தாசி. நீர் என் வீட்டிற்கு வேலை செய்யத் தகுமா? நாங்கள் அல்லவோ தங்களுக்குத் திருப்பணி செய்தல் வேண்டும்?

அப்படி இருக்கத் தாங்கள் இவ்விதம் செய்வது சரியன்று. இப்படித் தாங்கள் செய்வதன் காரணம் என்ன ?" என்று வணக்கத்துடன் கேட்டாள்.

தாசியின் பணி மொழிகளைக் கேட்ட நளாயினி தன் எண்ணம் பூர்த்தியாகும் என்று எண்ணி, அத்தாசியைப் பார்த்து, "அம்மா ! நீ என்னிடத்தில் இப்போது அன்புடன் பேசியது போல எனது கோரிக்கையையும் நிறைவேற்றச் சம்மதிப்பாயானால், இதன் காரணத்தை யான் உனக்குச் சொல்லுவேன்," என்றனள். அதற்குத் தாசி, "அம்மையீர்! என்னால் செய்யக்கூடிய காரியமாக இருந்தால், அதைத் தடை யில்லாமல் செய்து முடிக்கிறேன்," என்று கூறினள்.

நளாயினி, "அம்மா! என் கணவர் மகானுபாவர்; சகல கலைகளிலும் வல்லவர்; தவசிரேஷ்டர். இப்படிப்பட்டவர்க்கு நான் செய்த தீவினையின் பயனால் குஷ்ட வியாதி சம்பவித்திருக்கிறது. நாங்கள் தீர்த்த யாத்திரையாகப் பல விடங்களுக்கும் சென்று இப்போது இந்த நகரை அடைந் திருக்கிறோம். அவர் உன்னுடைய பெருமையைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கின்றாராம். அதனால், உன்னை யடைய விரும்புகிறார். எனினும், உனக்குத் தரவேண்டிய பொன் எங்களிடத்தில் இல்லை. இதுவே எனது விருப்பம், " என்று சொன்னாள்.

இதைக்கேட்ட தாசி தனக்குள், "இதுவென்ன! விந்தையாக இருக்கின்றதே! அழியாத மோட்ச

இன்பத்தை நாடும் முனிவர், துன்பம் தரும் சிற்றின்பத்தை விரும்புவாரா ? இந்த அம்மையை விட நாம் எந்த வகையில் சிறந்திருக்கிறோம்; இதன் உள் கருத்து வேறாக இருக்கலாம் போலும்,!" என்று நினைத்து, நளாயினியை நோக்கி, "அம்மா! தங்களுக்கு உண்டாகும் பாக்கியம் எனக்கும் உண்டாகட்டும். நீர் அவரைத் தடையின்றி இங்கு அழைத்து வாரும்," என்றனள்.

உடனே நளாயினி மிகுந்த சந்தோஷத்துடன் தன் நாயகரிடம் சென்று, நடந்த விஷயத்தைத் தெரிவித்தாள். அதைக் கேட்டதும் முனிவர் மேலுக்கு உவகை காட்டிப் புன்முறுவல் பூத்தார். நளாயினி மறு நாள் இரவு அவரைக் கூடையில் வைத்துத் தூக்கிச் சென்று, தாசியின் வீட்டுத் தலைக்கடையில் இறக்கினாள். அப்போது முனிவர் நளாயினியை நோக்கி, "அடி பெண்ணே! நீ இங்கேயே இரு; நான் கூப்பிடும் போது ஓடிவா," என்று கூறி, உள்ளே சென்று, தெருக் கதவைச் சாத்திக் கொண்டார். உள்ளே வந்ததும் முனிவர், முன்பு நளாயினியை மணக்க எடுத்த சுந்தர உருவம் கொண்டு தலைவாயிலுக்கு உள்ளே சென்றனர்.

தாசி அவரைக் கண்டதும் திகைப்படைந்து, எதிரோடி வந்து, "ஐயரே ! தங்களைப்போல அழகுடையவரை நான் இதுவரையில் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. உம்மையோ அவ்வம்மையார் குஷ்ட ரோகி என்றனர் ? அவர்

அப்படிக் கூறியதற்குக் காரணம் யாதோ அறியேன்," என்று கூறினள்.

அதற்கு முனிவர், "பெண்ணே! அவள் எனது கற்பிற் சிறந்த காதலி. அவளுடைய கற்பின் உறுதியைச் சோதிப்பதற்காக அவளுக்குப் பெரு வியாதி உடையவனைப்போல நான் தோன்றி வருகின்றேன். அவளுடைய மனத்தைச் சோதிப்பதற்கே நான் இங்கு வர விருப்பங் கொண்டதாகக் கூறினேன். நீ இந்த இரகசியத்தை ஒருவருக்கும் வெளியிடக் கூடாது. வெளியிட்டால் உன் தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து நீ இறப்பாய். இது சத்தியம்," என்று கூறி விட்டு அவளிடம் விடை பெற்றுக்கொண்டு, முன் வாயிலுக்கு வந்தனர். அங்கு முனிவர் தம் பழைய வடிவம் கொண்டு கதவின் தாழை நீக்கி நளாயினியைக் கூப்பிட்டார். அக்கூப்பாட்டைக் கேட்ட உடனே அவ்வம்மை கதவைத் திறந்து உள்ளே வந்து, அங்கு உட்கார்ந்திருக்கும் தன் கணவரைக் கூடையில் வைத்துக்கொண்டு தன் இருப்பிடம் சென்றாள்.

ஐந்தாம் அத்தியாயம்

ஒரு நாள் இரவில் இருள் மிகுந் திருந்தது. அப்போது கிருஷ்ணபக்ஷ மாகையினாலும்,வானத்

தில் மேகங்கள் நெருங்கி யிருந்ததனலும் இருள் அவ்வாறு மிகுந்திருந்தது. அதனேடு இடியும், மின்னலும் அதிகமாய் இருந்தன. மழையும் சிறு தூறலாகத் தூறிக்கொண் டிருந்தது. அப்போது மாவிந்த நகரை அடுத்த காட்டின் ஒரு புறத்தில் முனிவர் ஒருவர் தாம் செய்த தீவினையின் பயனுல் திருடன் என்று அவ்வூர் அரசனுல் பொய்க் குற்றம் சாட்டப்பட்டுக் கழுவேற்றப்பட் டிருந்தார். அவர் பெயர் மாண்டவ்வியர் என்பது.

கற்புக் கரசியாகிய நளாயினி வழக்கம் போல அன்றும் தன் கணவரைக் கூடையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். அப்போது அவள், மிகுந்த இருட்டினுலும், மழையினுலும் வழி தப்பி, வேறு வழியாகச் சென்றுவிட்டாள். அவ்விதம் நளாயினி செல்லும் போது தலைமீது இருந்த கூடை, அங்குக் கழுவில் ஏற்றப்பட் டிருந்த மாண்டவ்வியருடைய கால்களில் தற்செயலாகப் பட்டது. அதனுல், மாண்டவ்வியருக்கு நோய் அதிகரித்தது. அவர் மிகுந்த கோபங்கொண்டு, கீழே பார்த்தார். அம்முனிவர், 'இத்துன்பத்தை நமக்கு உண்டாக்கினுர் யார்?' என்று நோக்கி, ஒரு பெண் என அறிந்து, அப்பெண்ணுகிய நளாயினியை நோக்கி, "அடி பாவி! நொந்த புண்ணில் எரி கோலை நுழைத்ததுபோலக் கழுவில் அவஸ்தைப் பட்டுக்கொண் டிருக்கும் என்னைக் கூடையால் இடித்தாயே! ஆதலால், பொழுது

விடிந்ததும் நீ அமங்கலையாகக் கடவாய்," என்று சபித்தார்.

அச்சாப மொழி நளாயினியின் செவிகளில் நாராசம்போல நுழைந்தது. அதனால், நளாயினி, அம்பினால் அடிபட்ட மயிலைப்போல அங்கம் பதைத்தாள். 'அந்தோ! தெய்வமே!' என்று கதறினாள். பிறகு அவள் தனக்குள் ஒருவாறு தேறி, "இவர் யாரோ முனிவர்போலக் காண்கிறார். நான் அறியாமல் செய்த தீங்கிற்கு இம்முனிவர் இவ்வளவு கடுமையான சாபம் கொடுத்தாரே! இதுவோ பெரியோரின் செய்கை! சிறியோர் செய்த சிறுபிழையைப் பெரியோராயின் பொறுப்பது கடனல்லவா? எனது அருமைக் கணவர் இறந்துபடவோ நான் இவ்விதமெல்லாம் கஷ்டப் படுவது? சூரியன் உதித்தா லல்லவோ பொழுது விடியப் போகிறது? பல் உயிரும், பல உலகும் படைத்து அளித்து அழிக்கும் ஒப்பற்ற கடவுளே! நீர் சாட்சியாக, நான் என்னுடைய கற்பைக் காத்து, என்கணவருக்கு வேண்டிய பணிவிடைகளைத் தவறாமல் உள்ளன்போடு செய்து வருவது உண்மையானால், ஆதித்தன் இவ்வுலகில் உதிக்காமல் இருக்கக் கடவன்," என்று எதிர் சாப மிட்டாள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

என்று திருவள்ளுவ நாயனார் கூறியதற்கு ஏற்ப, நளாயினியின் கற்பின் மகிமையால் சூரியன் உதிக்கவே இல்லை. கதிரவன் தோன்றாததால், பூமி முழுதும் இருள் மயமாக இருந்தது. அத னால் எல்லா உயிர்களும், உணவு இன்றி வருத்தப் பட்டுக்கொண் டிருந்தன.

அவ்வாறு உயிர்கள் எட்டு நாட்கள் துன்புற்று வருந்த லாயின. தேவர்கள் அதனைக் கண்டு, அதற்குக் காரணம் மாண்டவ்விய முனிவரே என் பதை அறிந்து, அவரிடம் சென்றார்கள். அவர் கள் முனிவரை நோக்கி, "உத்தமரே! தங் களால் இவ்வுலகம் எட்டு நாட்களாகத் துன் புற்று வருந்துகிறது. பலர் காரணமாக ஒருவர் துன்பத்தை அடையலாம். ஒருவருக்காக உல கமே அழியலாமா? இது தங்களுக்குத் தெரியாத தல்லவே! ஆதலால், தாங்கள் இட்ட சாபத்தை நீக்குவீராக," என்று வேண்டினார்கள்.

கேட்ட முனிவர், "விண்ணவர்களே! இக்கெடு திக்கு முதலிலே காரணமானவன் நானே. ஆயி னும், இவ்வாறு உலக முழுதும் வருந்தும்படி செய்தவள் நளாயினியாவாள். அவளது கற்பின் மகிமையால் கதிரவன் கட்டுண்டான். அவ்வுத்த மியை அடைந்து கேளுங்கள்," என்றனர்.

உடனே தேவர்கள் கற்பரசியாகிய நளா யினியை அடைந்து கேட்டார்கள். அதற்கு நளாயினி, "தேவர்களே! நீங்கள் கூறுவது

நீதியேயாயினும், சூரியன் உதித்தால் என் கணவர் இறந்து விடுவாரே! என் கொழுநரை இழக்கவோ நான் வழியைத் தேடிக் கொள்வேன்.? ஆதலால், நீங்கள் மாண்டவ்விய முனிவரிடம் சென்று, அவர் எனக்கு இட்ட சாபத்தை முதலில் நீக்கும்படி கேளுங்கள். அவர் அச்சாபத்தை நீக்கினுல், பிறகு நான் இட்ட சாபத்தை நீக்குவேன்," என்றனள்.

அவ்விதமே தேவர்கள் முனிவரைக் கேட்டார்கள். பிறகு இருவரும் தம்முடைய சாப மொழிகளை முறையே நீக்கினர். உடனே ஞாயிறு தோன்றிற்று. உலகம் களிப்பை அடைந்தது. அதனுல், நளாயினியின் கற்பின் சிறப்பும், மாண்டவ்விய முனிவரது தவப் பெருமையும் உலக முழுவதிலும் பரவின. உடனே முனிவர் அவ்வூர் அரசனுல் கழுவிலிருந்து இறக்கப்பட்டுத் தமது இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

நளாயினி அன்று முதல் தேவரும், யாவரும் போற்ற விளங்கி இருந்தனள். இவ்விதம் கற்பரசி சிறப்பு அடைந்ததை மவுத்கலியர் கண்டு, தம் மனத்தில் அடங்காத மகிழ்ச்சியை அடைந்திருந்தார். அவர் ஒரு நாள் நளாயினியைக் கூப்பிட்டு, "எனது அன்புள்ள காதலி! உன்னுடைய கற்பின் திறத்தைக் கண்டு நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். உன்னைச் சோதிப்பதற் காகவே நான் உனக்குப் பலவிதத் துன்பங்களைக் கொடுத்து

வந்தேன். நீ என்னை நினைத்துக்கொண் டிருக்கிறபடி நான் கிழவனு மல்லன்; குட்ட ரோகியு மல்லன். நீயே பர்த்தாவிற்கு ஏற்ற பதிவிரதை. உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கேள்; தருகிறேன்," என்றனர்.

அதைக் கேட்ட நளாயினி மனம் மகிழ்ந்து, தன் கணவரை வணங்கி, "சுவாமி! எல்லாச் சிறப்பும் தங்களுடைய இன்னருளால் உண்டானவையே அன்றி, அடியாளால் உண்டானவையல்ல. தேவரீர் என்னிடம் என் மனம் உவப்ப இருந்து வாழ வேண்டும். இதுவே அடியாள் வேண்டும் வரமாகும்," என்று கூறினள். உடனே அம்முனிவர் நளாயினி கண்களுக்குத் தம்முடம்பில் தோன்றும்படி செய்துகொண் டிருந்த முதுமையையும், பெருநோயையும் நீக்கிக்கொண்டு சுந்தர வடிவம்கொண்டு அக்கற்பரசியோடு 'மணியும் அதன் ஒளியும் போல' இருந்து, வாழ்ந்து வந்தனர்.

மறுபிறப்பில் இக்கற்பரசி மவுத்கலியரின் வரத்தின்படி திரௌபதியாக அவதரித்துப் பாண்டவர்களை மணந்து, இன்புற்று வாழ்ந்தனள்.

II. வாசுகியார்

முதலாம் அத்தியாயம்

பல ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியாவானது பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் தொண்டை மண்டலம் என்பது ஒன்று. அது நிலவளத்திலும், நீர்வளத்திலும் செழிப்படைந்து இருந்தது. ஒரு சமயம் அந்த நாட்டில் ஒரு வேதாளம் தோன்றி, அங்குள்ள பயிர் பச்சைகளை அழித்தும், உயிர்களை வதைத்தும் குடிகளுக்குப் பல துன்பங்களைச் செய்து வந்தது. அதனால், குடிகள் ஆரூத் துயரக் கடலில் அமிழ்ந் திருந்தார்கள்.

இவ்விதம் அந்த நாடு வருந்தும் போது அந் நாட்டிலுள்ள காவேரிப் பாக்கம் என்னு மூரில் வேளாளர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் மார்க்க சகாயர் என்பது. அவர் அவ்வூருக்குத் தலைவராய், ஆயிரம் ஏர் வைத்துப் பயிர்த் தொழில் நடத்தி வந்தார். அவருக்குப் பரந்த நிலமும், திரண்ட செல்வமும் பொருந்தி இருந்தன. அந்தச் செல்வத்திற்கு ஏற்றவாறு அவர் தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை எதிர்கொண்டழைத்து, இன் சொல் கூறி, அருகிருந்து அமுதூட்டி அனுப்புவர்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்னும் வேத வாக்கு அவரிடத்தில் மிகப் பொருந்தி இருந்தது.

மார்க்க சகாயர் மேழிச் செல்வத்தைக் கோழை படுத்தி வரும் வேதாளத்தால் மிகவும் மனம் நொந்திருந்தார். அவர் அப்பொல்லாப் பூதத்தை ஒழிக்க எண்ணி, "அவ்வேதாளத்தை எவன் தொலைக்கிறனோ, அவனுக்கு ஓர் ஊரும், திரளான செல்வமும் தருவோம்," எனப் பல ஊர்களில் பறை யறைவித்தார்.

அந்த விளம்பரத்தைக் கேட்ட சிலர் பொருள் ஆசை கொண்டு வேதாளத்தைத் தொலைக்க முன் வந்தனர். அவர்கள் தங்களுடைய மந்திர சக்தியாலும், வேறுவித வல்லமையாலும் அதை ஒழிக்கப் பலவாறு முயன்றனர். முயன்றும் ஒன்றும் பயன்படவில்லை. அவர்களில் சிலர் இவ் வேதாளத்திற்கே இரையாயினர். வேறு சிலர் அப்பூதத்தைக் கண்டதும், "அந்தோ செத்தோம்," என்று அலறிக்கொண்டு ஓடி மறைந்தனர். இவ்விதமாக அப்பூதத்தை அடக்க முயன்றோரெல்லாம் அதனால் துன்புற்றனர்.

அதனால் மார்க்க சகாயர் மிகவும் மனம் வருந்தி வேறு வழி அறியாமல் இருந்தார். வேதாளத்தால் ஏழைகள் படும் துன்பமே அவருக்குப் பெருந் துன்பமாக இருந்தது. அவர் தாம் கொண்ட எண்

ணத்தை அவ்வளவோடு விட்டு விடவில்லை. அவர் அவ்வேலைகளுக்கு நெல்லும், பொருளும் உதவி, அப்பூதத்தை ஒழிப்பதற்கு ஏற்ற வழி தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

இத்தகைய பரோபகாரிக்குப் புத்திரியார் ஒருவர் இருந்தனர். அப்பெண்மணியார் தம் தந்தையாரின் நற்குணங்களுக்கு ஏற்றவாறு அழகிய மேனியும், நுண்ணிய அறிவும் உடையவராய் விளங்கினார். அவர், "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை;" "தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை," என்னும் நீதிகளுக்குப் பொருந்த நடந்து வந்தார். பெற்றோர் கற்பித்த கற்பில் சிறிதளவும் தவறமாட்டார். இவ்வித நற்குணம் வாய்ந்த பெண்மணியாரின் பெயர் வாசுகியார் என்பது. அவர் தக்க பருவம் அடைந்து, தம் பெற்றோர் அடைவதற்கு அரிய பெருஞ் செல்வம் தாமே எனச் சிறப்படைந்திருந்தார்.

இரண்டாம் அத்தியாயம்

காவேரிப் பாக்கத்துக்குச் சற்றுத் தூரத்தில் மலையொன்றுண்டு. அஃது அளவில் சிறிய தாயினும் காட்சியில் மிகவும் அழகுள்ளது. அம்மலையின் அடிவாரத்தில் பலவகை மரங்கள் தழைத்து ஓங்கிக் குளிர்ச்சியான நிழலைத் தந்துகொண்டிருக்கும். அங்குப் பல முனிவர்கள் பிறப்பு என்னும்

பெருங்கடலை நீந்தி, மோட்சத்தை அடையத் தவம் புரிந்து வந்தார்கள். அவர்களுள் திருமூலரும், போகர் முதலிய சித்தர்களும் இருந்தார்கள். இப்பெரியோர்க்கு இடையே நடுநாயகமாக மற்றொருவரும் அமர்ந்திருந்தனர். அவர்தாம் தமிழ் வேதமாகிய திருக்குறள் என்னும் அரிய நூலை இயற்றியருளிய பொய்யாமொழிப் புலவர்.

கருமமே கண்ணாக இருந்த மார்க்க சகாயர் அம்மலைமீது அமர்ந்திருக்கும் முனிவர்களின் பெருமையைக் கேள்விப்பட்டு, அவர்களிடத்திற் சென்று, தம்முடைய குறைகளைத் தெரிவித்துக் கொள்ள எண்ணினர். அவ்விதமே அவர் ஒரு நாள் அம்மலைக்குச் சென்று, அங்குள்ள முனிவரைக் கண்டு, நிலத்தில் தம் உடல் பட வணங்கி நின்றார். அவருடைய பணிவைக் கண்ட முனிவர்கள் அவரது வேண்டுகோள் யாது எனக் கேட்டனர். அவ்வேளாளர் அவர்களை நோக்கி, "ஐயன்மீர்! இந்த நாட்டுக் குடிகளாகிய நாங்கள் ஒரு வேதாளத்தால் பெருந்துன்பத்தை அடைந்து வருகிறோம். அது தினம் தினம் தன் கண்ணிற்பட்ட மனிதரையும், ஆடு மாடுகளையும் கொல்வதோடு, பேருழைப்பால் பெருகி வரும் பயிர்பச்சைகளையும் நாசஞ் செய்து வருகிறது. அதை ஒழிக்க எங்களுடைய சிற்றறிவுக்கு எட்டியவரையில் பலவாறு முயன்றோம். அவை எல்லாம் பெருங் காற்றில் அகப்பட்ட சிறு தூசாகப்

பறந்து போயின. ஆதலால் தங்களைப் போன்றவர்களே அதை ஒழிக்க நல்ல மருந் தாவார்கள், என்று எண்ணித் தங்களிடம் அடைக்கலம் புகுந்தேன்,” என்றனர்.

மார்க்க சகாயருடைய குறைமொழிகளைக் கேட்ட முனிவர்கள், “அந்தக் காரியத்தை எளிதில் செய்ய வல்லவர் திருவள்ளுவர்தான்,” என்று நினைத்து அவரை வேளாளருக்குச் சுட்டிக் காட்டினார்கள்.

முனிவர்கள் சுட்டிக் காட்டியதன் குறிப்பை உணர்ந்த மார்க்க சகாயர் அப்போதே தம் எண்ணம் நிறைவேறி விட்டதாகச் சந்தோஷம் அடைந்து திருவள்ளுவரிடம் சென்று அவரை வணங்கித் தம் குறையை விண்ணப்பித்து நின்றார். அதைக் கேட்ட வள்ளுவனார் இரக்கங் கொண்டு திரு நீற்றைப் பஞ்சாட்சர மந்திரத்தால் மந்திரித்து, அதை வேதாளத்தின் மீது தூவும்படி சொல்லிக் கொடுத்தார்.

அவ்வரு மருந்தை மார்க்கசகாயர் பணிவோடு வாங்கி, வள்ளுவரையும், மற்றுமுள்ள முனிவர்களையும் தாழ்ந்து வணங்கித் தமது இருப்பிடம் சேர்ந்தார். அவர் அந்தத் திருநீற்றை வேதாளத்தின்மேல் பிரயோகித்தார். உடனே அவ்வேதாளம் கதறிக்கொண்டு ஓடி மறைந்தது. பஞ்சாட்சரத்தின் மகிமையாலோ, திருவள்ளுவரின் திறமையாலோ கொடும் பூதம் தொலைந்தது.

பிறகு குடிகள் பயமற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். வேளாளரும் தாம் கொண்ட எண்ணம் நிறை வேறியதால், மிகவும் மகிழ் வடைந்து இருந்தனர்.

சில நாள் சென்ற பிறகு அவ்வேளாளர் தம் மகளார் வயதடைந் திருப்பதால் அவருக்கு ஏற்ற மணமகனைத் தேடி மண முடிக்க எண்ணினர். அவ்விதமே அவர் தம் ஊரில் உள்ள பல ஆடவர்களையும் ஆராய்ந்து பார்த்தார்; அவர்களில் ஒருவரும் தகுந்தவர்களாகக் காணுமல் தயங்கினர். இவ்விதமாக அவர் ஒருநாள் தம்முடைய மகளாரின் கலியாணத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும்போது, முன் தம் பெருங்குறையை நீக்கியருளிய திருவள்ளுவரின் ஞாபகம் வந்தது. அவர் மனம் அம்முனிவரின் திருமேனியின் அழகைப் பருகி, அவருடைய மகிமையை எண்ணி எண்ணி வியந்தது. உடனே அவர் வேறொன்றையும் கருதாமல் முன்பு சென்ற மலையை நோக்கி நடந்தார்.

சென்ற மார்க்க சகாயர் மலைமீது சென்று திருவள்ளுவரைக் கண்டு வணங்கி நின்றர். வேளாளருடைய பணிவைக் கண்ட இளமுனிவர் இன்முகங் காட்டி அவரை அருகே அமரச் செய்தார். வேளாளர் அவ்விதமே அமர்ந்து, அவரை நோக்கி, “சுவாமி உம்முடைய அருளால் வேதாளம் தொலைந்துவிட்டது. அதனல் அன்று முதல்

நாங்கள் சுகமாக வாழ்ந்து வருகிறோம். இப்போது அடியேன் மனத்தில் ஓர் எண்ணம் குடிகொண்டிருக்கிறது. அதைத் தங்களிடத்தில் தெரிவிக்க என் நாக்கு நாணினும், என் மனம் தங்கள் மீது கொண்ட அன்பின் மிகுதியால் பலமடைந்து என்னை இங்குப் பிடர் பிடித்துத் தள்ளி வந்தது. அடியேனுக்குப் பெண் ஒருத்தி உண்டு. அவள் தக்க பருவ நிலையை அடைந்து சில மாதங்கள் ஆகின்றன. அவளுடைய நற்குண நற்செய்கைகளை நான் எடுத்துச் சொன்னால், அவை சிறப்பை அடையா. இவ்விதமான என் அருந்தவப் புதல்விக்கு மணம் முடிக்க எண்ணி அவ்வருமைச் செல்விக்குத் தக்க கணவனை என் சுற்றத்தார்களில் தேடினேன். என் சுற்றத்தார்களில் எவரும் என்னருமைச் செல்விக்கு ஏற்ற கணவராக எனக்குக் காணப்பட்டிலர். ஆதலால் என் மனம் தங்களுடைய மகிமையையே நாடுகின்றது. அவ்விதம் நாடி நிற்கும் என் மனத்தை வேறு வழியில் திருப்ப ஆற்றல் இல்லாதவனாய் இங்கு வந்தேன். இதுவே என் விண்ணப்பம்," என்று கூறி மௌனமாக இருந்தனர்.

வள்ளுவர் இவ்வுரைகளைக் கேட்டதும் அவருடைய உடலில் ஒரு புதிய உணர்ச்சி பரவியது. இவ்வளவு காலம் வரையில் துறவறத்தில் ஈடுபட்ட அவருடைய மனம் இல்லற நிலையைப் பலவாறாக ஆராய்ந்தது. அதனால், அவர் சிறிது

நேரம் மௌனமாக ஆழ்ந்த யோசனையில் இருந்தார். பிறகு அவர் தம் எதிரில் இருக்கும்மார்க்க சகாயரை நோக்கி, "பெரியீர்! துறவியாக இருக்கும் என்னை உம்மகளை மணந்து இல்லறத்தா னாகும்படி வேண்டுகிறீர். என்னுடைய மனத்திலும் பல நாட்களாக ஓர் எண்ணம் உதித்திருக்கிறது. அதாவது நெடுங்கால மாகப் பெரியோர்க ளெல்லாரும் பேரின்பத்தை அடையத் துறவறமே சிறந்தது, என்று எண்ணி இல் வாழ்க்கையை வெறுத்துக் காடே இடமெனக் கொண்டு காட்டுக்குச் சென்றுகொண் டிருக்கின்றனர். ஆனால், என்னுடைய விருப்பமோ அத்தகைய தன்று.

"கடவுளுடைய திருவிளையாடல்கள் எல்லாம் இல்லறத்தானிடமே பொருந்தி இருக்கின்றன. உலகத்தின் இயற்கையும் இல்லறத்தின் தன்மையாகவே காணப்படுகின்றது. கடவுளின் இயல்பான செயல்கள் இவ்விதம் இருக்க, இதைக் கொள்ளாமல் தள்ளிவிட்டுச் செயற்கையான துறவறத்தைக் கொண்டு காட்டிற்குச் செல்லுவது சிறந்த தாகாது.

"ஆகையினால், பெரியோரே! நான் என் மனத்தில் கொண்ட எண்ணத்தைச் சொல்லளவில் நிறுத்தாமல், செய்கையிலும் அவ்விதமே நடத்தி உலகத்தாருக்குக் காட்ட விருப்பம் கொண்டுள்ளேன். அவ்விருப்பம் இன்று உமது வேண்டுகோளால் சிறிது முதிர்ச்சியையும் அடைந்தது.

ஆனாலும், நான் கொண்ட எண்ணத்தை நிறை வேற்ற என் ஒருவனால் ஆகாது. எனக்கு மனைவி யாக வாழ்க்கைப்படுகிறவளும் என்னுடைய கருத் துக்கு ஒத்தவளாக இருக்கவேண்டும். அவளு டைய நல்ல ஒழுக்கத்தால்தான் இல்லறம் சிறப்பை அடையும். ஆதலால், எனக்கு மனைவி யாகும் தங்கள் மகள் என் மனதிற்குப் பொருத்த முடையவளாக இருந்தால் நான் அவளை மணந்து கொள்ள யாதொரு தடையும் இல்லை," என்றனர்.

வள்ளுவருடைய மனக் குறிப்பை அறிந்த வேளாளர் மிகவும் சந்தோஷம்கொண்டு, "தங்க ளுடைய திருஉள்ளத்தின்படியே செய்யலாம்," என்றனர். திருவள்ளுவர் சிறிது நேரம் மௌன மாக இருந்து, பிறகு அவ்வேளாளருடன் செல் லப் புறப்பட்டனர். வேளாளர் வள்ளுவரை அழைத்துக்கொண்டு தமது வீட்டை அடைந் தனர். அங்கு அவர் அவருக்கு வேண்டிய பணி விடை செய்து, இருக்கையில் அமரச் செய்தனர்.

மார்க்க சகாயர் வாசுகியாரை அழைத்து முனி வரைத் தரிசிக்கும்படி கூறினார். வாசுகியாரும் திரு வள்ளுவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி நின்றார். வள்ளுவர் அவ்வம்மையைச் சிறிது நேரம் உற்று நோக்கிப் பிறகு தாம் வரும்போது கொண்டு வந்த மணலைச் சமைத்துத் தரும்படி கூறினார். வாசுகியார் அதற்கு ஒன்றும் எதிர் சொல்லாமல் முத்தோர் சொல் வார்த்தையை

அமிர்தமாகக் கொண்டு, அம்மணலை அன்புடன் வாங்கினார்; பிறகு அதை அரிசியே எனப்பாவித்து அதற்குச் செய்ய வேண்டுவன செய்து உலையில் இட்டார். அது கொதித்து வெந்து சாதமா யிற்று. வாசுகியார் அதனோடு பல கறிகளையும் இன்சுவை பொருந்தச் சமைத்துத் தம் தந்தைக் குத் தெரிவித்தார்.

அன்று வாசுகியாருடைய பெற்றோர் தம்மக ளின் கற்பின் திறமையை நேரில் கண்டு மிகவும் களித்தனர். பிறகு வேளாளர் தம்மனத்தில்கொண்ட எண்ணம் அக்கணமே நிறைவேறிற்று என உவகைகொண்டு திருவள்ளுவரை அமுதருந்த வேண்டினர். வள்ளுவரும் வாசுகியாரின் திற மையை அறிந்து உடன்பட்டார்.

வாசுகியார் தாம் சமைத்த மணற் சோற்றைப் பல கறிகளுடன் அன்போடு பரிமாற, வள்ளுவர் மனங் களிக்க உண்டனர். பிறகு அவர் வாசுகியா ரைத் தமக்கு இல்லாளாக ஏற்றுக்கொள்ள மனம் இசைந்து தமது விருப்பத்தை மார்க்கசகாயருக்கு அறிவித்தார். அதைக் கேட்ட மார்க்க சகாயர் பேருவகை கொண்டு, நல்ல முகூர்த்தத்தில் கலி யாணத்தைத் தம் பந்துக்களுடன் சிறப்பாகச் செய்தனர்.

மூன்றும் அத்தியாயம்

வள்ளுவனுர் சில நாள் தம் மாமனுர் வீட்டில் அவர்களுடைய மனம் களிக்க இருந்து, பிறகு அவர்களிடம் விடை பெற்று மனைவியோடு சென்னைப் பட்டினத்தில் உள்ள திருமயிலாப் பூரில் வந்து சேர்ந்தனர். அங்கு அவர் ஊருக்கு வெளியே சிறு குடிசை ஒன்று கட்டி அதில் தங்கினுர். வயிறு வளர்க்கைக்காக அவர், செய்தொழிலில் பாப மில்லாத தாகிய நெய்தல் தொழிலை மேற் கொள்ள எண்ணினுர்.

அந்தக் காலத்தில் ஏலேல சிங்கன் என்பவன் அநேக கப்பல்களைத் தனக்குச் சொந்தமாகக் கொண்டு வியாபாரம் செய்து வந்தான். திருவள்ளுவர் அவனிடத்தில் நூல்வாங்கித் துணி நெய்து, அதை விற்று வரும் சிறு பொருளால் இல்லறத்தை நடத்தி வந்தார்.

செல்வம் மிகுந்த தம் தாய் வீட்டில் சிறக்க வாழ்ந்த வாசுகியார், தம் கொழுநர் கொண்டுவரும் சிறு பொருளைப் பெருநிதியாகக் கொண்டு, கணவருடைய குறிப்பை அறிந்து அதற்கேற்ப நடந்து வந்தாள். திருவள்ளுவரும் அவ்வம்மையாருடன் பொருந்தி வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் இவ்விதம் இருக்கையில் ஒரு நாள் ஒரு பெரியவர் அவர்களுடைய வீட்டிற்கு வந்து திருவள்ளுவரை வணங்கி, அருந்தவத்தீர் ! இல்லறம் பெரியதோ ? துறவறம் பெரியதோ? அடி

யேனுக்கு அருள்புரிய வேண்டும்," என்று விண்ணப்பித்து நின்றார். அப்பெரியவரு டைய விருப்பத்தை அறிந்த வள்ளுவர் அவ ருக்குப் பதில் ஒன்றுங் கூறாமல், அவரே நேரில் அறிந்துகொள்ளட்டும், என்று எண்ணி இருந் தார்.

ஒரு நாள் வள்ளுவர் தம் மனைவியாரைக் கூப் பிட்டார். அப்போது அவ்வம்மையார் கிணற்றில் நீர் சேந்திக்கொண் டிருந்தார். தம்முடைய நாயகர் கூப்பிடுதலைக் கேட்டதும் அவர், பாதிக் கிணற்றளவு தூக்கிய நீர்க்குடத்தைக் கயிற்றுடன் அப்படியே விட்டு விட்டு விரைந்து வந்தனர்.

மற்றொரு நாள் காலையில் வாசுகியார் நாயக ருக்குப் பழைய அமுது பரிமாறும் போது, அவர் 'சாதம் சுடுகிறது; விசிறி கொண்டுவா," என்றனர். உடனே அவ்வம்மையார் எதிர் ஒன்றும் சொல் லாமல் விசிறி கொண்டு வந்து விசிறினர்.

வேறொரு நாள் பகலில் வள்ளுவர் துணி நெய்துகொண் டிருந்தார். அப்போது அவரு டைய தறிக்குழல் கீழே தவறி விழுந்துவிட்டது. அதை எடுக்க அவ்வம்மையாரை விளக்குக் கொண்டுவரச் சொன்னார். அவ்விதமே அவ்வம் மையார் விளக்குக் கொண்டு வந்து பார்த்துக் குழலை எடுத்துக் கொடுத்தார்.

இவ்விதக் கற்புச் செயல்களை நேரில் கண்ட அப்பெரியவர் மிகவும் வியந்து, " மனையாள் கற்

புடையவளாக இருந்தால் இல்லறமே பெரியது; இல்லையானுல், துறவறம் பெரியது," என்றறிந்து, நாயனுரை ஒன்றும் கேளாமல், அவரை வணங்கிச் சென்ருர்.

வாசுகி அம்மையார் தம் கணவரையே தாம் வணங்கும் தெய்வமாகக் கொண்டு, அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைக் குறைவில்லாமல் செய்து வந்தனர். இவ்விதம் அவர், பலரும் கண்டு களிக்க இல்லறத்தைப் பல நாள் நடத்தி, ஒரு நாள் உலக வாழ்க்கையை முடித்து முத்தி அடையும் போது தம் கணவராகிய நாயனுரை அன்புடன் நோக்கினுர்.

அந்த நோக்கை அருகிருந்து அறிந்த நாயனுர், "உன்னுடைய விருப்பம் யாது? அதனை வெளியிடுக," என்றனர். அம்மையார் நாயனுரைப் பார்த்து, "சுவாமி! நாள்தோறும் தங்களுக்கு அன்னம் படைக்கும் போது சிறு பாத்திரத்தில் தண்ணீரும், ஓர் ஊசியும் வைக்கும்படி கட்டளை இட்டீர்கள். தங்களை மணந்துகொண்ட நாள் தொடங்கி இதுவரையிலும் அவ்விதமே அடியாளுஞ் செய்து வந்தேன். அதன் காரணம் இன்றுவரையிலும் அறியேன்," என்றனர்.

அதைக் கேட்டதும் நாயனுர் புன்னகை கொண்டு, "நங்காய்! சாதம் பரிமாறும்போது அன்னம் வெளியே சிதறு மாஞுல், அப்பருக்கைகளை ஊசியால் குத்தி, நீரில் அலம்பி உண்ணுவ

தற்காக அவைகளை வைக்கச் சொன்னேன். அன்னம் படைக்கும் போது ஒரு நாளும் பருக்கை சிதறவுமில்லை; அவைகளை நான் எடுத்து உபயோகிக்கவுமில்லை. ஆதலின், அதன் கருத்து இதுகாறும் உனக்கு விளங்காமலிருந்தது," என்றனர்.

அதைக் கேட்டதும் அம்மையார் மனக்குறை தீர்ந்து, முத்தி அடைந்தனர். நாயனார் அக்கற்பரசியாரின் பிரிவுக்கு மனம் சகியாதவராய் மிகவும் வருந்தி,

"அடிசிற் கினியாளே! அன்புடை யாளே!
படிசொல் தவறாத பாவாய்!—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழூஉம்! பேதையே! போதியோ?
என்தூங்கும் என்கண் இரா."

என்று பாடி அவருடைய திருமேனியைச் சமாதி செய்தார்.

இவ்விதமாக நாயனாரும், மற்றவர்களும் புகழவும், தம்முடைய உடல் அழிந்தும், புகழ் அழியாமல் நின்று உலகம் உள்ள அளவும் தம்முடைய சரித்திரத்தை யாவருங் கேட்டு நற்புத்தி பெறவும் செய்தது, வாசுகியாரின் கற்புத்திறமே அன்றோ?

கண்ணகி

முதலாம் அத்தியாயம்

நமது தென்னாட்டின் ஒரு பகுதியாகிய சோழ வளநாடு, காவேரி ஆற்றின் பாய்ச்சலால் மிகவும் செழித்துள்ளது. அந்த நாட்டில் காவிரிப்பூம் பட்டினம் பழைய காலத்தில் சிறந்ததாக விளங்கியது. அது சோழ அரசர்களுக்குப் பழைமையான இராஜதானியாகும்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் கரிகால் வளவன் என்னும் மன்னர் மன்னன் அந்த நகரைத் தலை நகராகக் கொண்டு, அரசு புரிந்து வந்தான். அவனுடைய செங்கோலின் கீழ்ச் செம்மையாக வாழ்ந்து வந்த குடிகளுள், செல்வத்தில் சிறந்த வணிகர் பலர் இருந்தனர். அவர்கள் குடிப் பிறப்பால் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூன்று வகைப் படுவர்.

அந்த வணிகர்களுள் மாநாய்கர் என்னும் பெயருடைய வணிகர் ஒருவர் இருந்தார். அவர் பெருங்குடியர் மரபில் பிறந்தவர். அவருக்குப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் கண்ணகி என்பது. அவள் உருவத்திலும், குணத்திலும் சிறந்து விளங்கினாள். கண்ணகி பன்னிரண்டாம் வயதை அடைந்ததும், அவள்

தந்தையார் அவளைத் தம் மரபில் உதித்த கோவலன் என்னும் வணிகனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

விவாகம் நடந்த பிறகு, கண்ணகி தன் நாயகனுடன் மாமியார் வீட்டில் சில காலம் இருந்தாள். பிறகு, கோவலனுடைய தாய் அவர்களைத் தனியே வைத்து, அவர்கள் இல்லறம் நடத்துவதைப் பார்த்து மகிழ விரும்பினாள். அப்படியே அவள், அவர்களை ஒரு மாளிகையில் வேண்டிய பொருளுடன் குடி வைத்தாள். அங்கே கோவலனும், கண்ணகியும், மலரும் அதன் மணமும் போல, மனமொத்து வாழ்ந்து வந்தார்கள்.

அப்போது, அந்த நகரத்தில் மாதவி என்னும் நாடகக் கணிகை ஒருத்தி இருந்தாள். அவள் ஆடல் பாடல்களிற் சிறந்தவள்; அழகில் மிகுந்தவள்; தன் தொழிலில் கை தேர்ந்தவள்; கரிகால் வளவனிடம் தலைக்கோல் என்னும் பட்டமும், சில பரிசுகளும் பெற்றவள். இவைகளால் அவள் மற்றக் கணிகையரை விட மிகச் சிறந்து விளங்கினாள்.

மாதவியின் சிறப்பைக் கேள்விப்பட்ட கோவலன் அவள் வீட்டிற்குச் சென்று, அந்த இடமே தனக்கு ஏற்ற இடமாகக் கொள்ளத் தலைப்பட்டான். அவன் அவ்விதமாக, அவனுடைய செல்வமெல்லாம் அதனுடைய வீட்டை விட்டு, மாதவியின் இல்லத்தில் சென்று சேர்ந்தது. கண்

ணகி, தன் கணவன் இவ்விதம் இருப்பதைக் கண்டும், அவனுக்கு மாருக ஒன்றும் கூறியதில்லை. அவன் வரும்போதெல்லாம் இன்முகங் காட்டி, நன்மொழி கூறி, அவனுக்கு வேண்டிய பொருள்களைத் தானே கொடுத்து, அவனை அனுப்புவாள். ஆனாலும், கோவலன் அவ்விதம் இருப்பதை நினைக்குந் தோறும், அவளுடைய மனம் வருந்தியது. அவள் தன்னுடைய வருத்தத்தைப் பிறருக்குத் தெரிவித்தால், அதற்குக் காரணமான தன்னுடைய நாயகனுக்கே அஃது இழிவைத் தரும் என்று எண்ணித் தன் மாமனர், மாமியாருக்கும் சொல்லாமலிருந்தாள்.

ஒரு நாள் கோவலன் மாதவியுடன் மனம் வேறுபட்டு, அவளிடம் வெறுப்புக் கொண்டான். உடனே அவன் தன் வீடு போய்ச் சேர்ந்தான். கோவலனுடைய வருகையை அறிந்த கண்ணகி மிகவும் மகிழ்ந்து, அவனை எதிர் கொண்டு அழைத்து உபசரித்தாள். பிறகு அவள், "நம் நாயகர் நம்மிடம் ஏதேனும் பொருளைப் பெற்றுக் கொண்டுபோய் மாதவிக்குக் கொடுக்க வந்தனர் போலும்," என்று எண்ணி, "என் ஆருயிர்த் தலைவரே! இன்னும் என்னிடம் இரண்டு காற் சிலம்புகள் இருக்கின்றன; அவைகளைக் கொண்டு செல்லுங்கள்," என்று கூறினுள்.

இவ்வுரைகளைக் கேட்ட கோவலன் தன் நாயகியாகிய கண்ணகியின் உயர் குணத்தையும், தன்னு

டைய இழிவான நடத்தையையும் எண்ணி மிகவும் வருந்தினான். பிறகு அவன் கண்ணகியை நோக்கி, "என் அன்பே! நான் ஆராயாமல் செய்த, தீங்கால் நமது செல்வமெல்லாம் தொலைந்தது. ஆதலால், நான் மதுரைக்குச் சென்று வியாபாரம் செய்து பொருள் சம்பாதிக்கலாம் என்று எண்ணினேன். நீயும் என்னுடன் வருக," என்றனன். கண்ணகியும் அவனை விட்டுப் பிரிய மனமில்லாமல் சந்தோஷத்தோடு செல்ல உடன்பட்டாள்.

கோவலனும், கண்ணகியும் அன்று விடியல் பொழுதில் எழுந்து, இருவரும் காலுநடையாக மதுரையை நோக்கி நடந்தனர். செல்லும் வழியில் அவர்கள் இளைப்பாற ஒருசோலையில் தங்கினார்கள். அங்கே சமண மதத்தைச் சேர்ந்த கவுந்தி என்னும் பெருமையுடைய தவமூதாட்டியார் ஒருவர் இருந்தனர். கோவலன் அவரைக் கண்டு வணங்கித் தான் மதுரைக்குப் போதலைக் கூறினான். அதைக் கேட்ட கவுந்தி அடிகள் இருவரையும் வாழ்த்தி, "அன்புடை மக்களே! மதுரையிலுள்ள பெரியோரிடத்தில் அறவுரைகளைக் கேட்க நான் விருப்பங்கொண்டிருக்கிறேன். ஆதலால், நானும் உங்களோடு வருகிறேன்," என்றனர். உடனே மூவரும் புறப்பட்டு, மதுரையை நோக்கி நடந்தனர்.

அவர்கள் செல்லும் போது கவுந்தி அடிகள் அவர்களுக்கு உண்டான துன்பத்தைக் கேட்டு,

ஆறுதலான நன்மொழிகளைக் கூறித் தேற்றிச் சென்றனர். போகும் போது அவர்கள் எதிர்ப் படுவோரை வழி கேட்டுப் பகலில் தங்கியும் இரவில் நடந்தும் மதுரையின் புறஞ்சேரியுட் புகுந்தார் கள்; அங்கு அவ்விரவைக் கவுந்தி அடிகளின் உபதேச மொழிகளால் இனிதாகக் கழித்தார்கள்.

மறு நாள் காலையில் ஆயர் குலத்தில் பிறந்த மாதரி என்னும் கிழவி கவுந்தியைக் கண்டு வணங்கினாள். கவுந்தி அடிகள் அவளை வாழ்த்தி, "மாதரி! இதோ என் பக்கத்தில் அமர்ந் திருக்கும் நங்கையையும், இவள் கணவனையும் அவர்களுடைய சுற்றத்தார் அறியும் வரையில் உன் வீட்டில் அடைக்கலமாக வைத்திரு. இவள் கற்புத் தெய்வம்; தனக்கு உண்டான துன்பத்தை யும் கருதாமல், தன் நாயகனுக்கு ஏற்பட்ட துய ரத்தையே பெரிதாக நினைக்கும் உத்தமி. தவத்தி னர் கொடுக்கும் அடைக்கலப்பொருள் சிறியதாக இருந்தாலும் பிறகு அது பேரின்பத்தை விளைக் கும். ஆதலால், உடனே இவர்களை அழைத்துக் கொண்டு போய் வேண்டிய பொருள்களைக் கொடுத்து உபசரி," என்றனர். மாதரி அவ்வாறே அவ்விருவரையும் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

மாதரி அவர்களைத் தன் வீட்டை அடுத்த ஒரு புதிய வீட்டில் தனியே வைத்துச் சமையலுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தாள்; ஐயை

என்னும் பெயருடைய தன் மகளையும் அவர்களுக்குத் துணையாய் இருக்கச் செய்தாள். கண்ணகி, மாதரி கொடுத்த பொருள்களை அன்போடு வாங்கிச் சமைத்துத் தன் கணவனுக்குப் பரிமாறித் தானும் உண்டாள்.

கோவலன் உண்ட பிறகு தன் காதலியை அருகில் அழைத்து, அவளை அன்போடு தழுவி, "என் கண்மணி! நாம் இவ்விதம் வெளி வந்ததை நம் பெற்றோர் அறிந்து மிகவும் துன்பமடைவர். இவ்விதக் கொடுஞ் செயல்களுக்கெல்லாம் நானே காரணமாக இருக்கிறேன். பெற்றோர்களுக்கு அருகிருந்து செய்யவேண்டிய நற்கடனை இழந்ததுடன், உன்னையும் துன்பத்துக்கு உள்ளாக்கினேன். இவ்வளவுக்குங் காரணம் தாசியின் கூட்டுறவே. அவளால் நமது செல்வமெல்லாம் சில நாளில் சென்று மறைந்தது," என்று சொல்லிப் பெரிதும் வருந்தினான்.

அப்போது கண்ணகி கோவலனுக்கு ஆறுதலான நன்மொழிகள் கூறித் தேற்றி, "என் அருயிர்க் கணவரே! நான் இப்போது பெரும்பாக்கியத்தைப் பெற்றேன். நெடுநாளாக நான் தங்களைப் பிரிந் திருந்தேன். இப்போது நான் தங்கள் திருவடி யண்டையே இருக்கும் புண்ணியத்தைப் பெற்றிருக்கிறேன். அடியாள் வேண்டிய செல்வம் இதுவே யாகும். செல்வம் முதலியவை நீங்கினுல் மறுபடியும் பெறலாம். இப்பாக்கியம்

கிடைப்பது அரிதல்லவா?" என்று தன் இனிய சொற்களால் அவனை மகிழ்வித்தாள். அவ்வுரைகளைக் கேட்டதும் கோவலன் முகத்தில் புன்னகை தோன்றித் தவழ்ந்தது. இவ்விதமாகக் கோவலனும், கண்ணகியும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு, கோவலன் கண்ணகியை நோக்கி, "என் அன்பே! உன்னுடைய காற் சிலம்புகளில் ஒன்றைத் தருக. அதை விற்று வருகிறேன். நான் வரும் வரையில் உனது தனிமையை நோக்கி வருந்தாதே," என்று அவளைத் தேற்றி, அவள் காற் சிலம்புகளில் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, கடை வீதியை நோக்கி நடந்தான்.

இரண்டாம் அத்தியாயம்

மறு நாள் காலை ஆயிற்று. கண்ணகி தன் நாயகன் அதுவரையினும் வாராமை கண்டு ஏங்கினாள். அப்போது ஒவ்வொரு நிமிஷமும் அவளுக்கு ஒவ்வொரு வருஷமாகக் கழிந்தது. அவள் கோவலன் சென்ற திக்கையே நோக்கி, அவனுடைய வருகையை எதிர் பார்த்து நின்றாள். அப்போது ஓர் இடைப் பெண் ஓடி வந்து, மற்ற இடைப் பெண்களிடம் ஏதோ மெல்லச் சொன்னாள். அதைக் கேட்ட எல்லோரும் மிகவும் பரிதபித்து அழுதார்கள். அவர்களு

டைய வருத்தத்தைக் கண்ட கண்ணகி சந்தேகித்துத் தானும் மனக் கலக்க மடைந்து, தன்னுடன் இருக்கும் ஐயையை நோக்கி, "தோழி! என் காதலர் இன்னும் வந்திலர். இவர்களும் ஏதோ மறைவில் பேசிக் கொள்ளுகின்றனர். விதி என்னை வஞ்சித்து விட்டது போலும். அவர்கள் அறிந்த விஷயம் உனக்குத் தெரிந்தால் சொல்லுக. என் மனம் படபடக்கின்றது. உடல் நடுங்குகின்றது," என்று கூறிக் கண்களில் நீர் சோர நின்றாள்.

கண்ணகியின் துயரத்தையும், அவளுக்கு உண்டான நிலைமையையும் கண்ட ஐயை மிகவும் வருந்தி, நடந்ததைச் சொல்ல நா எழாமல், " அந்தோ! நான் எவ்விதம் அதை உரைப்பேன்! அரசியின் சிலம்பைத் திருடிய கள்வன் என்று கோவலனைக் கொலை செய்து விட்டார்களாம்," என்று கூறி அழுதாள்.

அம்மொழிகள் தன் செவியின் புகு முன்பே கண்ணகி ஓவென அலறி, மண்மீது விழுந்தாள்; புரண்டாள்; கண்கள் வீங்கும்படி முகத்தில் மோதிக் கொண்டாள். " என் அன்பே ! ஆருயிர் மருந்தே! நான் இனி உம்மைப் பிரியா வாழ்க்கையைப் பெற்றேன், என்று பெருமிதங் கொண்டேன். மீண்டும் கொடிய வினைக்குள் ஆனேன். எவ்விடத்துச் சென்றீரோ !" எனப் பலவாறு கதறிக்கொண்டு வெளியே வந்தாள். பிறகு

அவள், "பாண்டியன் கோல் கோடித் தவறிழைத்தான். அதனால், நான் என் அன்பரை இழக்க நேர்ந்தது. எங்களை அன்போடு வரவேற்ற ஆயர் மகளிர்களே! நீங்கள் எல்லோரும் அறிக. சூரி கதிர்ச் செல்வனே! நீ அறிய என் கணவர் கள்வர்தாமோ?" என்று கேட்டாள். அதற்குச் சூரியன் அசரீரியாய் வானத்திலிருந்து, "மாதே! உன் கணவன் கள்வனல்லன். ஆராயாமல் உன் கணவனுக்குத் தீங்கிழைத்த இவ்வூரை எரி உண்ணும்," என்றனன்.


உடனே கண்ணகி தன்னுடைய மற்றொரு சிலம்பைக் கையில் ஏந்திக்கொண்டு நகரினுள் சென்றாள். அவள் அங்குள்ள கற்புடைய பெண்களை நோக்கி, "இதோ என் கையில் சிலம் பொன்று இருக்கிறது. இதன் இணையான சிலம் பொன்றை என் கணவர் விற்கவந்தார். அந்தச் சிலம்பை அபகரிக்க எண்ணி அநியாயமாக என் நாயகனைக் கொலை புரிந்தார்கள். நான் கூறுவது உண்மையாக இருந்தால்—என் கணவர்க்கு நான் அன்புக்கடன் செய்த கற்புடைப் பெண்ணால் இருந்தால், நான் என் கணவனை முன்புபோலக் கண்டு, அவர் கூறும் இன்சொல்லைக் கேட்பேன். அவ்விதம் இல்லையானால், 'இவள் கற்பின் தவறினள்', என்று என்னை விதுமுங்கள்," என்று அழுதாள்.

இவ்விதம் கதறி அழும் கண்ணகியை

மதுரையில் உள்ள யாவரும் கண்டு துன்ப மடைந்தனர். 'அரசன் அறியாமல் செய்த தீங்கிஞல் நகரம் என்ஞகுமோ!' என்று பயந்தனர். அவர்களுள் சிலர் கண்ணகியை அழைத்துச் சென்று, இறந்து கிடக்கும் கோவலனைக் காட்டினர்.

இரத்தம் பெருகி மண்மீது பிணமாகக் கிடக்கும் கோவலனைக் கண்ணகி கண்டதும் மூர்ச்சித்து மண்மீது விழுந்தாள். பிறகு அவள் எழுந்து, ஓ என அலறி, அவனை மார்போடு தழுவி 'என் நாயகரே!' என்று கூப்பிட்டாள். அந்தக் காட்சி அங்குப் பார்த்திருந்தவர் மனத்தை எல்லாம் கலக்கியது. அப்போது பிணமாகக் கிடந்த கோவலன் உயிர் பெற்று எழுந்தான். கற்புடைப் பெண்களால் ஆகாத காரியமும் இவ்வுலகில் ஒன்று உண்டா?

உயிர் பெற்ற கோவலன் தன் அருகே வாடிய முகத்துடன் கண்ணீர் கலங்க இருக்கும் கண்ணகியை நோக்கி, அவள் முகத்தைத் துடைத்தான். உடனே அவளுடைய முகம் செந்தாமரை என மலர்ந்தது. அவ்வம்மை தன் நாயகனுடைய பாதங்களில் விழுந்து வணங்கிஞள். கோவலன் தன் காதலியை நோக்கி, "என் அன்பே! நீ இங்கேயே இரு," என்று கூறித் தன் பொய்யுடலை விட்டு விண்ணுடு சென்ருன்.



மூன்றாம் அத்தியாயம்

அன்றைப் பொழுதே கண்ணகி பாண்டியன் அரண்மனைக்குச் சென்று, காவலர் மூலமாக அரசனைக் கண்டாள். அரசன், "நீ யார்! இங்கு வந்த தன் காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு அவ்வம்மை, "கோல் கோடிய அரசே! நான் காவிரிப்பூம் பட்டினத்தில் இருக்கும் மாசாத்துவான் என்னும் வணிகருடைய மரு மகள். என்பெயர் கண்ணகி என்பது. ஊழ்வினைப் பயனால் நானும், என் கணவரும் இந்நாட்டிற்குப் பொருள் சம்பாதிக்க வந்தோம். என் நாயகர் என்னுடைய காற்சிலம்பை விற்க வந்தபோது ஆராயாமல் அவரை நீ கொலை செய்வித்தாய். இது நீதி தானா என்று கேட்க வந்தேன்," என்றாள். அதற்கு வேந்தன், "அணங்கே! கள் வனைக் கொல்லுதல் காவலர் நீதியே அன்றோ!" என்றனன்.


கண்ணகி, 'அரசே! நீ நன்கு ஆராயாமல் கூறு கின்றாய். என் கணவர் கொண்டு வந்த சிலம்பிற்கு இணையானது இதோ ஒன்று இருக்கிறது. இத னுள் இருக்கும் அரிகள் மாணிக்கம்; ஆராய்ந்து பார்!" என்றனள்.

அரசன், "என் தேவியின் சிலம்பில் கருப்பன முத்துகளாகும்," என்றுகூறிக்கோவலன்கொண்டு வந்த சிலம்பை உடைத்தான். அதிலிருந்து மாணிக்கக் கற்கள் தெறித்தன. அதைக் கண்ட

தும் மன்னன் தான் தீர விசாரியாமல் தீங்கிழைத்ததை அறிந்து, அலறிச் சிங்காதனத்தின் மீது சாய்ந்தான். அதுவரையில் அருகே விருந்த அரசன் மனைவியாகிய கோப்பெருந் தேவி அரசன் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி கண்ணகியின் பாதங்களில் வீழ்ந்து வேண்டினாள். கற்பரசியாகிய கண்ணகி அவளது வேண்டுகோளுக்கு விணங்காமல், "யான் குறையாத கற்புடையவளானால், இவ்வரசனோடு இவ்வூரையும் அழிப்பேன்," என்று சபதம் கூறி, வெளியே வந்தாள்.

கோப்பெருந் தேவி சிம்மாசனத்துச் சோர்ந்து கிடக்கும் தன் நாயகனை நோக்கினாள்; அவனைப் பிணமாக விருக்கக் கண்டாள். உடனே அரசி ஓவென்று அரற்றி, அவன் மீது சாய்ந்தாள். அவளுடைய உயிரும் அவள் உடலைவிட்டு நீங்கியது. உத்தமப் பெண்கள் தம் கணவனை இழந்து உயிர் வாழ மாட்டார் அன்றோ ?

கண்ணகி கோபத்தால் ஆகேசங்கொண்டு, மதுரையைச் சபித்து எரித்தாள். உயிர்கள் யாவும் அல்லோல கல்லோலப் பட்டன. நகரமும் நாசமடைந்தது. பிறகு அவ்வம்மை வைகை யாற்றின் கரை வழியாகச் சென்று, மதுரையைக் கடந்து, பதினான்காம் நாள் சேர நாட்டை அடைந்தாள்; அங்கே திருச்செங் குன்று என்னும் குன்றின்மீது ஏறி, வேங்கை



மரத்தடியில் நின்ருள். அன்று மாலை கோவலன் தெய்வ வடிவத்தோடு விமானத்தில் வந்து, தன் நாயகிக்குக் காட்சி கொடுத்தான். கற்பரசி யாகிய கண்ணகி தன் கணவனை வணங்கி, விமா னத்தில் ஏறினுள். அப்போது தேவர்கள் மலர் மாரி பெய்து, அவ்விருவரையும் வாழ்த்தி, அவர் களை அழைத்துக் கொண்டு விண்ணுலகை அடைந்தனர். கண்ணகி தன் கணவனுடன் சென் றதை அம்மலையி லிருந்த குறவர்கள் கண்டு அதி சயித்துப் பாடிப் புகழ்ந்தனர்.

சேர நாட்டுக்கு அரசனுகிய சேரன் செங்குட்டு வினிடம் குறவர்கள், தாம் மலைமீது கண்ட காட்சியை வியப்புடன் உரைத்தார்கள். அதைக் கேட்ட அவ்வரசன் கண்ணகியி னுடைய கற்பின் திறத்தைப் புகழ்ந்தான். பிறகு அவன், 'இக் கற்புத் தெய்வத்தை நாம் வழிபடல் வேண்டும்.'
ன்று இமய மலைக்குச் சென்று, கல்கொண்டு வந்
ன். அக்கல்லால் பத்தினித் தெய்வமாகிய
ணகியின் உருவ மமைப்பித்து, அதற்குத்
மது
ு கோயிலொன்று கட்டுவித்து, அதில் அச்
யாவுட
பிரதிட்டை செய்து பூசித்து வந்தான்.
நகரமுய
முழுவதும் அக்கற்புத் தெய்வத்தை
வைகை ய
பட்டு வந்தது.
மதுரையைக்
பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
நாட்டை அ
கப் பெறின்."
குன்று என்னும் கு ற்றிற்று